பெப்ரவரி 2009 February | இதழ் 217 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION





கனடியத் தமிழரின் மனிதச் சங்கிலி

ரொறன்ரோ கவனயீர்ப்புகள்




இந்தியத் தூதரகம்



சிறீலங்கா தூதரகம்



அமெரிக்கத் தூதரகம்




டன்டாஸ் சதுக்கம்

அவசரகால அறிவித்தல் பக்கம்-5

Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

19 வது ஆண்டில் th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம், ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

## கனடியத் தமிழர் பேரெழுச்சி

கனடியத் தமிழர்கள் மத்தியில் 'எங்கள் மண், எங்கள் உறவுகள்' என்ற உணர்வு அண்மைக் காலங்களில் முன்னரிலும் பார்க்கப் பல மடங்கு மேலோங்கிப் பேரலையாகி இன்று பேரெழுச்சி கண்டுள்ளது.

கடந்த ஆண்டின் பிற்பகுதியில் ஊற்றுக்கொண்ட இந்தப் பேரலை, இந்த ஆண்டில் வீச்சுப் பெற்று பல தொடர் நிகழ்ச்சிகளைப் புலம் பெயர்ந்த மண்ணில் இடம்பெற வைத்துள்ளது.

கவனயீர்ப்புகள், விழிப்புணர்வுகள், உண்ணாவிரதங்கள், பதாதைகள் தாங்கிய நடைபவனிகள், எழுச்சி நிகழ்வுகள், காட்சிப்படுத்தல், பரப்புரைகள் என்ற வரிசையில் பல இடம்பெற்று வருகின்றன.

இரு வாரங்களாக ரொறன்ரோ பெரும்பாக முக்கிய சந்திப்புகளில் இடம்பெற்ற துண்டுப் பிரசுர விநியோகங்களும், தாயக நிகழ்வுகளின் வேதனைகளைச் சித்தரிக்கும் பதாதைகள் அடங்கிய காட்சிப்படுத்தல் என்பன பெருமளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த உதவின.

ரொறன்ரோவிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்னால் மகளிர் அமைப்பினாலும், இங்குள்ள சிறீலங்கா துணைத் தூதரகத்தின் முன்னால் மாணவ சமூகத்தினாலும், நகரிலுள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் முன்னால் கனடியத் தமிழர் சமூகத்தினாலும் அடுத்தடுத்து நடத்தப்பட்ட கவனயீர்ப்புகள், பின்னர் வரப்போகின்ற நிகழ்வுகளுக்குக் கட்டியம் கூறுபவையாக அமைந்தன.

ஜனவரி 30ஆம் திகதி இடம்பெற்ற 'மனிதச் சங்கிலி' பேரெழுச்சி வரலாற்றுச் சிறப்புக்குரியது. கனடிய மைய ஊடகங்களின் பதிவில் நிச்சயமாக இதற்கு ஒரு தனித்துவ இடமுண்டு.

கனடியத் தமிழரின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பங்கினர் ரொறன்ரொ பெரும்பாகத்தில் வசிப்பதால், ரொறன்ரோ யூனியன் ரயில் சந்தியை மையப்படுத்தி ஒழுங்கு செய்யப்பட்ட 'மனிதச் சங்கிலி', பலமான எதிர்பார்ப்பைப் பலரிடமும் முற்கூட்டியே ஏற்படுத்தியிருந்தது.

அந்த எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. சுமார் பதினெட்டு கிலோ மீட்டர் நீளமான யூனிவேர்சிட்டி வீதி - யங் வீதிகளில், ஒரு இலட்சத்தைத் தாண்டும் தொகையில் தமிழர்கள் அணிவகுத்து நின்றனர். இவர்களில் பெருந்தொகையானோர் மாணவர், சிறார், பெண்கள், முதியவர்கள்.

சட்டம் ஒழுங்கைப் பேணும் கடமைக்கென வந்த நகரக் காவலர்கள், தமக்கு வேலையில்லை என்ற நிலை கண்டு ஸ்தம்பித்துப் போயினர்.

சில நூறு அல்லது ஓராயிரம் பேர் வந்திருப்பரென எண்ணி வந்த கனடிய ஊடகவியலாளர்கள், கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிந்த தலைகடல் கண்டு வியந்து நின்றனர்.

நடுங்கும் குளிரில், கைகளும் கால்களும் விறைக்க நின்ற மக்களின் உணர்வு கண்ட கனடியச் சமூகம் விக்கித்துப் போனது.

ஆயிரமாயிரம் மக்கள் இங்கு கூடினர் என்று ஆங்கில ஊடகங்களே விபரித்துள்ளன. 'கரிபானா' வைபவப் பார்வையாளர் தொகையை இது தாண்டி விட்டதாக நகரக்காவலர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த மனிதச் சங்கிலி எதற்காக? கவனயீர்ப்புகள் எதற்காக? அந்த இலக்கை அடைவதற்கு இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டியுள்ளது.

அதுவரை நாம் சோர்வடையக்கூடாது. இணைவோம்; எழுவோம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர் காலம் இருதய நோய்க்கு வாய்ப்பான காலம்

மச்சாசெற்ஸ் பல்கலைக்கழக நடத்திய ஆய்வொன்றில், 259,894 ஹார்ட் அட்டாக் நோயாளர்களில் 157,169 பேருக்கு குளிர் காலத்திலேயே இருதய நோய் ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இது ஏறத்தாழ 53% ஆகும். பிராம்டனைச் சேர்ந்த இருதய நிபுணர் டாக்டர் மிலான் குப்தா, குளிரே முக்கிய காரணம் என்கிறார். குளிர் நிலை இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும், அது இருதய துடிப்பை அதிகரிக்கச் செய்யும். அத்துடன் உடலில் நிணநீர் பரம்பலையும் அதிகரிக்கும். இவை எல்லாம் மறைமுகமாக ஹார்ட் அட்டாக் வருவதை அதிகரிக்கின்றன என்கிறார்.

அத்துடன், வாழ்க்கை மாற்றங்களான, குறைந்த உடலுழைப்பு, கொழுப்பு, கலோரி கூடிய உணவுகள், அதிக மதுபாவனை, அதிக சிகரட் பாவனை, மற்றும் உடல் எடை அதிகரிப்பு என்பனவும் பங்கெடுக்கின்றன.

மிக முக்கியமான இன்னொரு காரணி ஸ்னோ தள்ளுதல், அள்ளுதலாகும். இதுவே பலர் தமது முதலாவது அட்டாக்கை அனுபவிப்பதற்கான காரணி என்கிறார் ஒஸ்லாவாவைச் சேர்ந்த டாக்டர் ராகேஷ். பாரம் கூடிய, கடின வேலையான ஸ்னோ தள்ளுதல் பலருக்கு பழக்கமான தொன்றல்ல. திடீரென்று கடினமான வேலையை செய்வதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சில அறிகுறிகள் தோன்றும். அதை அலட்சியப்படுத்தி விடுகின்றனர். பலருக்கு அறிகுறிகள் பற்றி தெரிந்திருப்பதில்லை. நெஞ்சில் பாரமாயிருப்பது, அமுக்கமாயிருப்பது, மூச்செடுக்க கஷ்ரப்படுவது, வியர்த்தல், வயிற்றுப் பிரட்டல் ஆகியன சில அறிகுறிகளாகும்.

சிலர் இவற்றின் போது ஓய்வெடுப்பதில்லை. அதனால் இவை அதிகரிக்கும். 20 நிமிடங்களுக்கு மேல் அறிகுறிகள் நீடித்தால், அது ஹார்ட் அட்டாக்கிற்கு வழிகோலும். இரத்த அழுத்தம் இருப்பவர்கள், ஸ்னோ தள்ளுவதற்கு முதல் தமது வைத்தியருடன் ஆலோசித்தல் அவசியம்.

வருடம் முழுவதும் சுறுசுறுப்பான இயக்கம், ஆரோக்கியமான சத்துள்ள உணவு என்பவை இருதயத்தை பாதுகாக்க உதவும். 15 வயதோ 70 வயதோ ஹார்ட் அட்டாக்கிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# உடனடியாக தேர்தலைச் சந்திக்க லிபரல் தலைவர் இக்னேடியவ் அச்சம்! அதனால் ஹாப்பருக்கு 'நிபந்தனை' ஆதரவு: பதவி ஆசையால் ஹாப்பரும் இணங்கினார்!

கன்சர்வேடிவ் கட்சியின் ஸ்டீபன் ஹாப்பர் தலைமையிலான கனடிய மத்திய அரசாங்கத்தைக் கலைத்து ஆட்சியைக் கைப்பற்றும் நடவடிக்கையில் லிபரல், என் டி. பி மற்றும் புளாக் குபெக்கா ஆகிய மூன்று எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைந்து ஈடுபட்டது பற்றிக் கடந்த இரண்டு மாதங்களாக விரிவாக ஆராய்ந்தோம்.

டிசம்பர் 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியிருந்தால், ஹாப்பரின் ஆட்சி நிச்சயம் கலைந்திருக்கும். ஆனால் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்த ஹாப்பர், புதிய வரவு செலவுத் திட்டத்தை ஜனவரி 27ஆம் திகதி சமர்ப்பித்தார்.

இதற்கிடையில் லிபரல் கட்சிக்குள் உருவான உட்கட்சி மோதல் அதன் தலைவராகவிருந்த டியோனைப் பதவியிறக்கச் செய்து, இக்னேடியவ் அவர்களைத் தலைவராக்கியது. இந்த மாற்றமானது எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பினது எதிர்காலம் பற்றிய பெரும் கேள்வியை எழுப்பியது.

அத்துடன், கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சி நீடிப்புக்கு ஒரு விதத்தில் பச்சைக் கொடி காட்டுவதாகவும் அமைந்தது.

இதனை நன்குணர்ந்த ஹாப்பர், தமது காய்களை வேறு விதமாக உருட்ட ஆரம்பித்தார். சகல மாகாணங்களின் தேவைகளையும் ஓரளவுக்கு நிறைவேற்றி, பலவேறுபட்ட மக்கட் குழுமங்களின் அத்தியாவசிய சேவைகளையும் வரவு செலவுத் திட்டத்தில் இணைத்து விட்டால் எதிர்க் கட்சிகள் ஆட்சியைக் கவிழ்க்கும் வாய்ப்புக் குறையுமென எண்ணி, நிதியமைச்சர் பிளாஹெட்டியை அத்திசை நோக்கிச் செல்லுமாறு பணித்தார்.

ஜனவரி 27ஆம் திகதி தாக்கலான வரவு செலவுத் திட்டமும் அவ்வாறே அமைந்தது எனலாம். பொருளாதார நெருக்கடி வேளையில், கூடிய பணவீக்கம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்றவாறு புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

'புதிய லிபரல் தலைவருக்கும், பிரதமர் ஸ்டீபன் ஹாப்பருக்குமிடையில் வித்தியாசமான இணக்க ஒப்பந்தமொன்று வந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை' என்று *'ரொறன்ரோ ஸ்டார்'* பத்திரிகையின் கட்டுரையாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தது இங்கு கவனிக்கப்பட வேண்டியது. அவர் சொன்னவாறே நடைபெற்றது எனலாம்.

புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே என் டி. பி மற்றும் புளொக் குபெக் கட்சி ஆகியவை தாங்கள் இதனை எதிர்க்கப்போவதாக அறிவித்திருந்தன. லிபரலின் நிலைப்பாட்டை அறிவதற்காகவே இந்த அறிவிப்பு வெளியானது எனலாம்.

தமது முடிவு பற்றி எதனையும் பகிரங்கமாக அறிவிக்காத லிபரல் தலைவர் இக்னேடியவ், "இன்றைய பொருளாதார நெருக்கடி காலத்தில் ஒரு தேர்தல் நடைபெறுவது நியாயமற்றது; இதனைப் பொதுமக்களும் விரும்ப மாட்டார்கள்" என்று சுற்றி வளைத்துப் பதிலளித்தார். இதன் அர்த்தமானது, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு தமது கட்சி ஆதரவு வழங்காது என்பதாகும்.


இன்றைய காலத்தில் ஒரு தேர்தலைச் சந்திக்க லிபரல் கட்சி தயாரில்லை என்பதை இக்னேடியவ் வெளிப்படுத்தியிருந்தார் என்பதே உண்மை. தமது தலைமையில் கட்சி தோல்வியைச் சந்திக்குமானால், தமது பதவிக்கே ஆபத்து ஏற்படுமென்பது இவரது அச்சம். இதனைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவும் அவர் தயாரில்லை.

இதனால் மூன்று நிபந்தனைகளை 'ஒப்புக்கு' இவர் அரசின் முன்னால் வைத்தார். அது, புதிய வரவு செலவுத் திட்டம் செயற்படும் முறைகளை அவ்வப்போது பகிரங்கமாகவும் அனைவருக்கும் தெரியும்படியாகவும் வெளிப்படுத்த வேண்டும் என்பதாகும்.

தமது அரசு கவிழ்வதை விரும்பாத ஹாப்பர், 'சிக்கெனப் பிடித்தேன் உன்னை' என்ற பாணியில் இக்னேடியவ்வின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டுள்ளார். இதனால் தமது அரசை அவரால் காப்பாற்ற முடிந்துள்ளது.

கன்சர்வேடிவ்வின் முதல் இரண்டு வருட ஆட்சிக்கு அப்போதைய லிபரல் தலைவர் டியோன் எவ்வாறு முண்டு கொடுத்தாரோ, அதுபோன்று அடுத்த இரண்டு வருடங்களுக்கு இக்னேடியவ் தோள் கொடுக்கப் போகிறார்.

முதல் சவாலே இவருக்குத் தோல்வி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சண்முகராஜா
RN, Dip. Nursing Ed.

# தன்கையே தனக்கெதிரி

ஆருயிர் நட்புமோர்நாள் ஆழ்குழியில் வீழ்த்துதற்கே
வாரிவிடும் உன்காலை வஞ்சனையாய்ப் - பாரினிலே
உன்னோ டுடனிருந்து உன்னையே காக்கும்கை
தன்னாலும் தான்வருமே நோய்.

தன்கையே தனக்குதவி என்பது பழமொழி. இது தன் நம்பிக்கையையும், பிறர்கையை நம்பியிராது தன்முயற்சியால் எதையும் ஆற்ற முடியுமென்ற மன உறுதியையும் ஒருவரில் ஊற்றெடுக்க வைக்கும் உன்னத வாக்கியம். அதேவேளை உடல் நலத்தைப் பொறுத்தவரை தன்கையே தனக்கெதிரியாகவும் பிறர்கெதிரியாகவும் ஆகிவிடுகிறதென்பதும் மறுக்கமுடியாத நிதர்சனம். கைகளின் சுத்தம் பேணப்படாதபோது வயிற்றோட்டம் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் தாமும் பாதிக்கப்பட்டு பிறருக்கும் அவற்றைப் பரப்பி இறப்புகளைப் பெருமளவில் ஏற்படுத்தும் அபாய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

கனடாவில் பனிக்காலம் ஆரம்பிக்கின்ற வேளையில் வயிற்றோட்டம் வாந்தி போன்ற குணங்குறிகளுடன் கூடிய viral gastroenteritis or stomach flu எனப்படுகின்ற தொற்று நோய் மக்களிடையே பெருமளவில் பரவுகின்ற ஆபத்து காணப்படுகிறது. இதற்குப் பிரதானமாக கைச்சுத்தமின்மையே காரணமாகக் கூறப்படுகிறது. வயிற்றோட்டம், கொலரா, வயிற்றுளைவு போன்ற இரைப்பை குடல் சம்பந்தமான நோய்களால் ஒவ்வொரு 20 மணித்துளிகளுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இறப்பு ஏற்படுகின்றது என தரவுகள் கூறுகின்றன. உணவுக்கால்வாய் வழியாக நோய்கள் பரவுவதற்கு அசுத்தமடைந்த கைகளும் அதன் மூலமாக நோய்க்கிருமிகளால் மாசடைந்த உணவை உட்கொள்ளுவதுமே முதன்மைக் காரணங்களாகும். வயிற்றோட்டம் போன்ற தடுக்கப்படக் கூடிய நோய்களால் முக்கியமாக வளர்முக நாடுகளில் வாழும் பெரும்பான்மையான மக்கள் உயிரிழப்பு, வறுமை, கல்வி வேலையிழப்பு போன்ற துன்பங்களால் அவதியுறுகிறார்கள்.

இந்த நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கும் அதனால் ஏற்படும் இறப்புகளைத் தவிர்ப்பதற்கும் சோப்பு போட்டு கைகளை கழுவிகொள்வது மிக எளிதான செலவு அதிகமற்ற ஆனால் மிகவும் பயனுள்ள ஒருவழியாகும். உணவுக்கால்வாய் வழியாகப் பரவும் நோய்கள் மட்டுமன்றி சுவாசப்பாதை, தோல் வழியாகப் பரவும் நோய்க்கிருமிகளால் தொற்று ஏற்படுவதற்கும் அசுத்தமடைந்த கைகளே மறைமுகமான ஊடகமாக இருக்கின்றன. அதனால்தான் சார்ஸ் (SARS) எனப்படும் அபாயகரமான சுவாசத் தொற்று கனடா போன்ற நாடுகளில் ஏற்பட்டு அதிகமான இறப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருந்த வேளையில் கைகழுவுவதன் முக்கியத்துவம் மிகவும் வலியுறுத்தப்பட்டது. இன்னும் மருத்துவமனைப் பணியாளர்கள் நோயாளர் பராமரிப்பின்போது தங்கள் கைகளைக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்காது போவதனால் மருத்துவமனையில் நெடுநாட்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களில் C.Difficile என அழைக்கப்படும் ஆபத்தான வயிற்றோட்ட நோய் பரவி அவர்களில் இறப்புகளை ஏற்படுத்தும் அபாய நிலை கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட அதிகரித்துக் காணப்படுகிறது.

கைச்சுத்தத்தின் முக்கியத்துவம் மக்களிடையே பெரிதும் உணரப்படாது உதாசீனம் செய்யப்படுகின்ற காரணத்தால் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் யுனிசெப், நோய்தடுப்பு நோய்க்கட்டுப்பாடு ஆகியவற்றிற்கான மையங்கள் போன்ற அமைப்புகளின் ஆதரவுடன் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் திகதியை (Global hand washing day) பூகோள கைகழுவும் நாளாகப் முதன்முறையாகப் பிரகடனப்படுத்தி செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அன்றைய தினம் உலகப்பந்தின் எல்லா நாடுகளிலுமுள்ள கல்வி நிலையங்கள், உள்ளூர் சமூக நிலையங்கள் போன்ற மாணவர்கள், மக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் கைச்சுத்தத்தின் முக்கியத்துவத்தை உணர்த்திப் பல்வேறு விழிப்புணர்வு செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மாணவர்களை மையப்படுத்தி இச்செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால் மக்களிடையே கைச்சுத்தம் பற்றிய பழக்கத்தில் பாரிய மாற்றம் ஏற்றபட்டு சுத்தமும் சுகமும் கூடிய புது உலகொன்று கட்டியெழுப்பப்படுமென்ற நம்பிக்கை தோன்றியிருக்கிறது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் நமது கைகளில் நோய்க்கிருமிகள் ஒட்டிக்கொள்கின்றன. எனவே கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைக் கண்டிப்பாக நாம் கவனத்தில் கொண்டு கைகழுவும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

1. எக்காரணத்தினாலாவது கைகள் வெளிப்படையாகவே அசுத்தமடைய நேரும்போது.
2. கழிவறை பாவித்த பின்பு.
3. உணவு சமைப்பதற்கு, பரிமாறுவதற்கு, உண்பதற்கு முன்பு.
4. சமையல் செய்யப்படாத இறைச்சி, மீன் போன்ற மாமிச உணவு வகைகளைக் கையாள முன்னும் பின்னும்.
5. குப்பை கூழங்கள் போன்ற கழிவுப் பொருட்களைக் கையாண்ட பின்பு.
6. நோயாளிகளைப் பார்வையிட்ட பின்பு அல்லது பராமரித்த பின்பு.
7. செல்லப்பிராணிகளை, வளர்ப்பு மிருகங்களை, அவற்றின் கழிவுகளைக் கையாண்ட பின்பு.
8. மக்கள் கூடும் பொது இடங்களுக்குப் போய்வந்த பின்பு, பொதுப்பிரயாண ஊர்திகளைப் பாவித்த பின்பு.

இப்படியான சந்தர்ப்பங்களில் கைகளை வெறும் நீரினால் கழுவினால் மட்டும் போதாது. கைகளை நீரில் நனைத்து சோப்புப் போட்டு நுரைக்கச் செய்து குறைந்தது 10 மணித்துளிகளாவது கைகளை நன்கு தேய்த்து சொரியும் நீரில் கழுவவேண்டும்.

கைகளின் சுத்தத்தை நன்கு பேணி நமது கைகள் நமக்கே எதிரியாகும் நிலையைத் தவிர்த்து அவை நமக்கும் பிறர்க்கும் நண்பர்களாக இருக்க வகை செய்வோம். நலமும் வளமும் பெற்று வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

# அவசரகால அறிவித்தல்

தமிழர் தாயகத்தில் சிறீலங்கா அரசு மேற்கொண்டு வருகின்ற அராஜக நடவடிக்கைகளால் அப்பாவித் தமிழர்கள் வகைதொகையின்றிப் படுகொலை செய்யப்படுவதைக் கண்டிக்கும் வகையிலும், இதனையொட்டி கனடியத் தமிழர் சமூகம் தொடர்ந்து நடத்தி வருகின்ற கவனயீர்ப்பு-விழிப்புணர்வு நிகழ்வுகளுக்கு மதிப்பளித்து, இவ்வாறான வைபவங்களில் இணைந்து செயற்படுவதற்காகவும், 2009 பெப்ரவரி 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரொறன்ரோ நகரசபை மண்டபத்தில் நடைபெறவிருந்த

**தமிழர் தகவல்**

**18வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடு**

**வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவம்**

ஆகிய இரண்டும் பின்போடப்பட்டுள்ளன என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

புதிய திகதியும் காலமும் உரிய வேளையில் அறியத்தரப்படும்.

தமிழர் தகவல் வெளியீட்டகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணி வேலுப்பிள்ளை
### எழுதும் தொடர் -10

**Did you bleed?** = உனக்கு குருதி போனதா?
**Did your finger bleed?** = உன் விரலிலிருந்து குருதி வடிந்ததா
**bleed to death** = குருதி போய் இற
**bleed for** your homeland? = உன் தாயகத்துக்காக குருதி சிந்து
**bleed** somebody **dry** = ஒருவரின் பணத்தை உறிஞ்சித் தள்ளு
**blend** the **flour with** the milk = பாலுடன் மாவைக் கல
**blend together** the flour and milk = மாவையும் பாலையும் கல

Oil does not **blend with** water = எண்ணெய் நீருடன் கலக்காது
Oil and water do not **blend** = எண்ணெயும் நீரும் கலக்கா
a **blend of** youth and experience = இளமையும் அனுபவமும் மிளிரும் இணைவு

May God **bless** you = கடவுள் உனக்கு அருள் புரிவாராக
My parents are **blessed** with good health = எனது பெற்றோர் உடல்நலப்பேறு பெற்றவர்கள்
the **Blessed Virgin Mary** = புனித கன்னி மரியாள்
**Blessed are the poor** = வறியோர் பேறு பெற்றோரே
a moment of **blessed calm** = அமைதி ததும்பும் கணம்
pray for God's **blessing** = கடவுளின் அருள் நாடித் துதி
with my parents' **blessing** = என் பெற்றோரின் ஆசியுடன் (இசைவுடன்)
a **blessing** of country life = நாட்டுப்புற வாழ்வின் கொடை
**a blessing in disguise** = தீமையாய் தோன்றி நன்மையாய் முடியும் விடயம்
**blight** the scenery = இயற்கைக் காட்சியை ஊறுபடுத்து
a **blight on** the scenery = இயற்கைக் காட்சியில் ஓர் ஊறு

**go blind** = விழிப்புலன் இழ
books for **the blind** = விழிப்புலன் அற்றவர்களுக்கான நூல்கள்
I was **blind to** my husband's faults = என் கணவரின் தவறு-களை நான் கண்டு கொள்ளவில்லை
**blind obedience** = கண்மூடித்தனமான பணிவு
a **blind bend** = (சாரதியின் கண்ணுக்கு) புலப்படாத முடக்கு
**as blind as a bat** = (வௌவால் போல்) குருட்டுத்தனம் மிகுந்த
**the blind leading the blind** = குருடருக்கு குருடர் வழிகாட்டல் (அறிவிலிகளுக்கு அறிவிலிகள் வழிகாட்டல்)
**They didn't show a blind bit of interest = They didn't show the blindest bit of interest** = அவர்கள் இம்மியும் அக்கறை காட்டவில்லை
**turn a blind eye to** human rights abuses = மனித உரிமை மீறல்களைக் கவனிக்காத மாதிரி நடி
The explosion **blinded** the soldiers = குண்டு வெடிப்பு போர்வீரர்களின் விழிப்புலனை ஒழித்தது
The sun **blinded** me = சூரிய ஒளி என் விழிகளைப் பகட்டியது
**blind somebody with** terminology = துறைமொழி கொண்டு ஒருவரைத் திணறடி
a **window blind** = சாளர மறைப்பு
They are **blind drunk** = அவர்களுக்கு முழு வெறி
**blind alley** = (1) முட்டுச் சந்து = (2) சென்று தேய்ந்திறும் முயற்சி
**blind date** = (நண்பர்களின் முயற்சியால் முன்பின் தெரியாத இருவர்) உறவுபூண வாய்ப்பு நாடும் சந்திப்பு
**blind man's b(l)uff** = கண்கட்டி விளையாட்டு
**blind spot** = (1) (நேரே பார்க்கும் சாரதிக்கு) புலப்படாத பக்கப்பாடு (2) கருத்தில் கொள்ளத் தவறும் விடயம்

I'll be back before you can **blink** = நீ கண் இமைப்பதற்குள் நான் திரும்பி வந்துவிடுவேன்
I tried to **blink away** my **tears** = I tried to **blink back** my **tears** = கண்ணிமைத்து என் கண்ணீரை நான் அகற்ற முயன்றேன்
**in the blink of an eye** = கண்ணிமைக்கும் கணத்தில்
The machine is **on the blink** = அந்தப் பொறி சரிவர இயங்கவில்லை
**They didn't even blink when they heard the news** = அவர்கள் அந்தச் செய்தியைக் கேட்டு வியக்கவே இல்லை

**a blistering attack** = கடும் கண்டனம்
**a blistering day** = வேகும் நாள்

a **block** of ice = பனிக் கட்டி
an **office block** = அலுவலகக் கட்டடம்
**block bookings** = கூட்டுச் சீட்டுப் பதிவு (கொள்வனவு)
a **block to progress** = முன்னேற்றத்துக்கு ஒரு முட்டுக்கட்டை
a **blocked pipe** = அடைபட்ட குழாய்
Put your stamps **on the block** = உன் முத்திரைகளை ஏலவிற்பனை செய்
**Put your head on the block = Put your neck on the block = Lay your head on the block = Lay your neck on the block** = கழுத்தைக் கொடு
**Don't block the way** = வழியை மறிக்காதே
**I blocked him in = I blocked his car in** = அவர் தனது காரை செலுத்திச்செல்ல முடியாவாறு எனது காரை அவருடைய காருடன் ஒட்ட நிறுத்தினேன்
**block off the road** = தெருவை மறித்து தடையிடு
**block out the sun** = வெயில் புகாது தடு
**block out your past ideology** = உன் கடந்தகால சித்தாந்தத்தை உதறித்தள்ளு
Shall we **block up** one of the holes? = துவாரங்களுள் ஒன்றை நாங்கள் அடைப்போமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரங்களுக்கிடையிலான பிணக்குகள் Sibling Rivalry



கனகேஸ்வரி நடராஜா
ஆசிரியர், இலங்கை-கனடா

சகோதரங்களுக்கிடையிலான பிணக்குகள் என்று நான் இங்கு குறிப்பிடுவது 6-7 வயது தொடக்கம் 10, 12 வயதுவரை உள்ள சிறு குழந்தைகளுக்கிடையில் காணப்படும் சின்னச் சின்ன முரண்பாடுகளையேயாகும். இன்றைய வாழ்க்கையில் பல இளம் பெற்றோர்கள் "எந்த நேரமும் வீட்டில் பிள்ளைகள் சண்டை பிடித்தபடிதான்" எனக் கூறுவது சகஜமாகி விட்டது. எட்டுப் பத்துப் பிள்ளைகளைப் பெற்று எமது பெற்றோர் ஒரு விதமான கிலேசமும் இல்லாமல் ஒரு பிள்ளையை இன்னொரு பிள்ளை வளர்த்துக் கொடுக்க எவ்வளவு ஆறுதல் அடைந்தனர். பல பிள்ளைகளோடு பிறந்து வளரும் பொழுது இருந்த அன்பும் பரிவும் இன்று காணப்படவில்லை.

ஒரு மேசையில் விளக்கு வெளிச்சத்தில் எவ்வளவு ஒற்றுமையாக நான்கு, ஐந்து சகோதரங்கள் ஒன்றாக இருந்து படித்தோம். ஒரு அறையில் ஒரு பாய், படுக்கையில் இரண்டு, மூன்று பிள்ளைகள் ஒன்றாகத் தூங்கினோம். எந்த ஒரு பொருளையும் பகிர்ந்து கொண்டோம். சாப்பாட்டு விடயத்தில் ஆகட்டும், உடுப்புகள் விடயத்திலாகட்டும் போட்டி ஏற்பட்டது கிடையாது. இன்றைய குடும்பங்களில் பொதுவாக இரண்டு குழந்தைகளே காணப்படுகின்றன. சில சமயங்களில் மூன்று குழந்தைகள் உள்ளன. மிகவும் அபூர்வமாக நான்கு குழந்தைகள் காணப்படுகின்றன. இவர்களுக்கிடையில் அன்பும், பாசமும் வளர்வதற்குப் பதிலாக போட்டியும், சுயநலமுமே வளர்வதை இன்றைய குழந்தை வளர்ப்பில் காண்கிறோம். இதில் விசனப்பட வேண்டிய விடயம் யாதெனில் முன்னர் எங்கள் பெற்றோர்களுக்குப் பெரிதாகக் கல்வியறிவோ, உளவியல் அறிவோ காணப்படவில்லை. அதற்கு மாறாக இன்றைய இளம் பெற்றோர் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவும் உளவியல் அறிவு மிக்கவர்களாவும், பிள்ளை வளர்ப்புச் சம்பந்தமான விடயங்களை உடனுக்குடன் கணினியில் உசாவி மேலதிக விளக்கங்களைப் பெறும் வசதி படைத்தவர்களாகவும் உள்ளனர். பயிற்றப்பட்ட குழந்தை உள ஆலோசகர்களிடம் கூட இன்றைய பெற்றோர்கள் ஆலோசனை பெறத் தயங்குவதில்லை. ஆனால் இவர்கள் இச்சிறு பிள்ளைகளுக்கிடையில் ஏற்படும் சின்னச் சின்னப் பிரச்சனைகள், சண்டைகள், முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதில் பிழையான தீர்வு முறைகளைக் கையாளுவதையே காணக் கூடியதாக உள்ளது. ஏதோ அந்த நேரத்துக்கு சுலபமான முறையில் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதிலேயே கவனம் எடுக்கிறார்கள். அடுத்து அக் குழந்தைகள் வேறொரு விடயத்தில் முறையிடும் பொழுது என்ன செய்வதெனத் தெரியாது அங்கலாய்க்கிறார்கள்.

இந் நாட்டில் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு அறை, அதில் அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் தனித் தனியாக வாங்கி வழங்கப்படுகின்றன. இதனால் சிறு பராயத்திலேயே ஒருவர் பொருளை இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ள (Share) இவர்கள் பழகுவதில்லை. வேலைக்குச் செல்லும் தாய்மார் தாங்கள் பிரச்சனைப்படாமல் இருப்பதற்காக ஒவ்வொரு பிள்ளைக்கும் தேவையானவற்றைத் தனித்தனியே வாங்கிக் கொடுக்கிறார்கள். "இல்லை" என்ற சொல் இப் பிள்ளைகளுக்குத் தெரியாது. பிள்ளைகள் போட்டி போடும் பொழுது பெற்றோர் பொறுமையாக இருந்து அறிவுரை வழங்குவதை விடுத்து அவர்கள் கேட்டவற்றை வாங்கிக் கொடுக்கிறார்கள்.

சிறு பிள்ளைகள் ஏன் இந்தச் சில்லறைச் சண்டைகளைப் பிடிக்கிறார்கள் என ஆராய்வோம். இவ்வாறு முரண்படுவது சிறு பிள்ளைகளுக்கு ஒரு பொழுது போக்காகும். (Way of entertaining themselves). வாலிப வயதில் இருக்கும் உங்கள் பிள்ளைகளோடு கதைத்துப் பாருங்கள் - தாங்கள் சின்ன வயதில் தலைகாணிகளால் சண்டை பிடித்ததோ, ஒருவர் பொருளை ஒருவர் எடுத்து உடைத்ததோ எல்லாம் ஒரு பொழுது போக்காகச் செய்ததாகவே சொல்வார்கள். சின்னப் பிள்ளைகளுக்கு சண்டை போடும் பொழுது வக்கிர புத்தி ஏற்படுவது கிடையாது. மற்றவரை சீண்டுவதும், எரிச்சல் ஊட்டுவதும், போட்டிக்கு இழுத்து வேடிக்கை பார்ப்பதும் சின்ன வயதில் ஒரு சந்தோஷமான பொழுதுபோக்காகும். ஆனால் இன்றைய பெற்றோர்கள் இந்த முரண்பாடுகளுக்கு அதிகளவு பெறுமானம் கொடுக்கிறார்கள் (Parents are over sensitive). பிள்ளைகளைப் பொம்மைகள் போல் வளர்க்க முடியாது. அவர்கள் சண்டை பிடிப்பதும் அவர்களின் குணாதிசயங்களில் ஒன்று. அப்படி அவர்கள் சண்டை பிடிக்காமல் இருப்பார்களானால் அவர்களில் ஏதோ பிழையுள்ளதெனப் பெற்றோர் உணர வேண்டும்.

வீட்டில் எந்நேரமும் நிசப்தம் (Pin Drop Silence) நிலவ வேண்டும் எனப் பெற்றோர் எதிர்பார்ப்பது அறிவீனம். ஒரு சிறு சத்தம் போட்டவுடனேயே பல தாய்மார்கள் அடித்துப் பிடித்துக் கொண்டு குசினியிலிருந்து விலக்குத் தீர்ப்பதற்காக ஓடி வருவார்கள். அவற்றில் நாங்கள் தலையிடாத பொழுது அவர்கள் அடுத்த நிமிடம் தாங்களாகவே ஒற்றுமையாகி விடுவதைப் பல பெற்றோர் அனுபவம் மூலம் அறிந்திருப்பார்கள். எத்தனையோ பிள்ளைகள் அம்மாவைக் குசினியிலிருந்து அலைக்கழிப்பதற்காகவே சண்டை போடுவார்கள். இங்குள்ள வேகமான வாழ்க்கை நீரோட்டத்தில் பல தாய்மார்களுக்கு ஆற அமர யோசிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. அதனால் சண்டைக்கான காரணத்தைக் கூட அறிய முயற்சிக்காமல் ஒவ்வொருவரையும் அவரவர் அறைக்கு அனுப்பி ஏதோ ஒரு விளையாட்டில் ஈடுபடுத்துவார்கள். இதனால் பிள்ளைகளின் அன்னியோன்யம் வளரும் வாய்ப்புகள் ஏற்பட இடமில்லாமல் போய்விடுகிறது.

இன்றைய இளம் பெற்றோர் அதிகளவில் உளவியல் அறிவு உடையவர்களாக உள்ளனர் (Psychological know how) இது கூட ஒருவிதத்தில் ஆபத்தாக முடிகிறது. ஒரு பிள்ளைக்கு ஒரு பொருளை வாங்கிக் கொடுத்தால் மற்றப் பிள்ளையின் மனம் நோகும் எனக் கருதுகிறார்கள். வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் கூட ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிப்பட்ட விளையாட்டுச் சாமான்களையோ, உடைகளையோ இரண்டு பார்சல்களாக ஒவ்வொரு பிள்ளையின் கைகளிலும் கொடுக்கிறார்கள். எத்தகைய அறியாமை இது. ஒவ்வொரு வீட்டிலும் ஏகப்பட்ட விளையாட்டுச் சாமான்களும், விதம்விதமான (சில சமயங்களில்) விருப்பமில்லாத ஆடைகளும் குவிந்து விடுகின்றன. பண விரயத்தின் உச்சக் கட்டத்தைப் பார்க்க வேண்டுமானால் ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் பிள்ளைகளின் விளையாட்டுச் சாமான்களிலும், உடுப்புகளிலும் பார்க்கலாம். ஒரு பிள்ளை போட்டுக் கழித்த பழைய உடுப்பையோ, ஒரு பிள்ளை விளையாடி முடித்த விளையாட்டுப் பொருளையோ அடுத்த பிள்ளை பாவிப்பது என்ற கதைக்கே இடமில்லை. இவ்வாறு செய்வதால் சிறுவயதிலேயே ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்காது இருக்கும் போக்கு ஏற்படுகிறது. தான், தனது என்ற சுயநல போக்குக்கு பெற்றோரே வித்திடுகிறார்கள்.

இதற்காகப் பிள்ளைகள் என்ன சண்டை பிடித்தாலும் பிடிக்கட்டும் என்று உதாசீனமாக இருக்கக் கூடாது. எப்பொழுது நாம் இவற்றில் தலையிட வேண்டும் என்பதை நாளாவட்டத்தல் அனுபவம் மூலம் அறியலாம். சண்டை பிடிப்பது ஒரு கெட்ட பழக்கம் என்பதை சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும். சண்டை பிடித்தால் அதற்கு விளைவுகள் உண்டு என்பதை தெரியப்படுத்த வேண்டும். (Let there be consequences). பிள்ளைகளுக்குப் பக்கத்தில் சதா காவல் இருக்க முடியாது. பெரிதாக விடும் பிழைகளுக்குத் தண்டனை உண்டு என்பதை முன்கூட்டியே அவர்களுக் குத் தெரியப்படுத்தி

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

## அகவை 18

'தமிழர் தகவல்' சஞ்சிகைக்கு அகவை பதினெட்டு ஆகியுள்ளது. நல்ல நடப்பு! தங்குதடையில்லாத பயணம்! வாழ்த்துக்கள்!

பருவத்துக்குப் பதினாறுதான் பொலிவான அகவை என்பது புலவர்களின் பொதுவான முடிவு. ஆனால் இலக்கியத்திலும் சமயத்திலும் பதினெட்டு அதிக முக்கியத்துவம் பெற்ற எண்ணாகவுள்ளது.

நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா சாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை ஆகிய நூல்கள் பதினெட்டையும் தொகுத்து **பதினெண்கீழ்க்கணக்கு** என்று நம் முன்னோர் பெயரிட்டிருக்கிறார்கள்.

நாடுகளையும் மொழிகளையும் பதினெட்டாகவும் தமிழர் கண்டனர். பதி-னெண் நாட்டு மொழிகளாவன: அங்கம், அருணம், கலிங்கம், காம்போசம், கொங்கணம், கோசலம், கௌசிகம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம். இவை **பதினெண்மொழிகள்** எனப்படும்.

தானியங்களும் நெல், தினை, வரகு, சாமை, இறுங்கு, கம்பு, குரக்கன், இராகி, எள், கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, கோதுமை, மொச்சை, காராமணி எனப் 18 வகைப்படும்.

சமயத்திலும் பதினெட்டு என்னும் எண் முதன்மை பெறுகின்றது. **பதினெண்கணம், பதினெண்புராணம்** என்பவை நல்ல உதாரணங்கள்.

முருகப் பெருமானுக்கும் கண்கள் பதினெட்டு. ஐயப்பனை அடையும் படிகளும் பதினெட்டு.

மகாபாரதத்தில் இந்த எண் சிறப்பான இடம் பெற்றிருக்கின்றது. இந்தப் பெரிய இதிகாசம் 18 பருவங்களைக் (பிரிவுகளை) கொண்டது. மகாபாரதப் போர் 18 நாட்கள் நடந்திருக்கின்றது. போரிலே பங்குபற்றிய பாண்டவர், கௌரவர் ஆகிய இருபகுதியாரது பெருஞ்சேனைப் பரப்புகளும் 18 ஆக இருந்திருக்கின்றன. மகாபாரதத்தின் சாரமாகிய பகவத்கீதை 18 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

எதற்கு இவ்வளவு மதிப்பு?

விளக்கங்கள் பல. அவற்றுள் ஒன்று இது:

பதினெட்டின் கூட்டுத்தொகை ஒன்பது. எண்களில் ஒன்பது தனித்துவமானது. எந்த எண்ணையாவது ஒன்பதாற் பெருக்க வரும் தொகையின் கூட்டுத்தொகையையும் ஒன்பதில் முடிவுறும் சிறப்பைக் காணலாம்.

ஒன்பது ஒரு சுழியத்தையும் (சைவரையும்) ஒன்றையும் பயன்படுத்தி எழுதப்படுகின்றது. சுழியம் அண்டசராசரத்தையும் ஒன்று அதனைத் தாங்கி நிற்கும் இறைவனையும் குறிப்பதாக ஞானிகள் கூறுகின்றனர். அதனைக் குறிப்பதே ஆனைமுக வடிவம். சுழியம் ஆனைமுகப் பெருமானின் முகத்தையும் ஒன்று தும்பிக்கையையும் குறிக்கும். இதற்கு ஓங்கார வடிவம் என்றும் பெயர். அண்டசராசரம் இந்த வடிவத்தில் உள்ளதாம்.

எனவே முக்கியமான ஒரு பருவத்தை அடைந்திருக்கும் தமிழர் தகவலை வாழ்த்துவோம்! நடந்தாய் வாழி தகவலே!

## சகோதரங்களுக்கிடையிலான..

விட்டால் ஒற்றுமையாக இருப்பார்கள். வீட்டு ஒழுங்குமுறைகளிலோ, சட்ட திட்டங்களிலோ நாம் ஒரே சீராக இருக்க வேண்டும். (Consistency). பல பெற்றோர் வீட்டில் விருந்தினர் வரும் பொழுதோ, அன்றேல் வேறு விதங்களில் நேரம் இல்லாமல் இருக்கும் பொழுதோ தன்னிச்சையாகப் பிள்ளைகளைச் செயற்பட அனுமதிப்பார்கள். பின்பு திடீரென தமது ஒழுங்குமுறைகளைச் செயற்படுத்துவார்கள். இதனால் பிள்ளைகள் மனதில் கூட குழப்பங்கள் ஏற்படலாம் (Conflicts). சிறுவயதிலேயே என்ன செய்தால் என்ன தண்டனை கிடைக்கும் என்பதனை எல்லா நேரமும் ஒரே மாதிரி அமல்படுத்த வேண்டும்.

Dr. William Antoni Boyle என்னும் உளவியலாளர் ஒரு பிள்ளையின் ஆளுமையில் மூன்று விடயங்கள் அடங்குவதாகக் கூறுகிறார் - அவையாவன உள, உடல், சமூகத் திறன்கள் ஆகும். இவை பிள்ளைக்குப் பிள்ளை வேறுபடும். இயற்கை ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளைக் கூட ஒரே போக்கு உடையவர்களாக உருவாக்குவதில்லை. ஆகவே பெற்றோர் ஒரு பிள்ளையோடு மற்றப் பிள்ளையை ஒப்பிட்டுப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். உண்மையிலேயே இது மிகவும் கடினமான விடயம். எம்மையறியாமலே இதனை நாம் செய்து விடுகிறோம். ஆனால் இதுவே பிள்ளைகளுக்கு இடையில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தப் போதுமாகவுள்ளது. சிலசமயங்களில் சுகவீனம் காரணமாக ஒரு பிள்ளைக்குப் பெற்றோரின் கவனம் மேலதிகமாகத் தேவைப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் மற்றப் பிள்ளைகளையும் சுகமில்லாத பிள்ளையைப் பராமரிப்பதில் சிறுவயதிலேயே ஈடுபடுத்துதல் வேண்டும். இதனால் இவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியும், அன்பும் அதிகரிக்கும்.

Dr. Brian Zelt என்னும் உளவியலாளர் சிறு பிள்ளைகள் முரண்படுவது நல்லது எனக் கூறுகிறார். ஏனெனில் முரண்படும் பொழுது பிரச்சனைகளைத் தீர்க்கவும், முடிவுகள் எடுக்கவும் பழகும் வாய்ப்புகள் ஏற்படுவதாகக் கூறுகிறார் (Negoiiate and compromise). இதனால் இவர்களுக்குப் புரிந்துணர்வு ஏற்பட சந்தர்ப்பங்கள் உண்டாகின்றன. பிள்ளைகளின் கோபத்தையோ, எதிர்ப்பையோ பெற்றோர் உதாசீனப்படுத்தக் கூடாது என்கிறார். அவற்றை விளங்கித் தீர்த்து வைக்காதவிடத்து பிள்ளையின் மனம் பாதிப்பு அடையவும், இதனால் முரட்டுத்தனம் ஏற்படவும் இடமுண்டு என்கிறார். இங்கு வாழும் பிள்ளைகள் அதிக நேரத்தை பிள்ளை பராமரிப்பாளரோடு கழிப்பதால் தாய்மார் தமக்கு நேரம் கிடைக்கும் பொழுது அளவுக்கதிகமாக அன்பு செலுத்துவதுண்டு. பிள்ளைகள் மிகவும் கெட்டிக்காரர். அதனை துஷ்பிரயோகம் செய்து தாம் நினைத்தவற்றைச் சாதிக்கப் பார்ப்பார்கள் (Manipulative and Abusive). பிள்ளைகளுக்குத் தேவைப்படுவது நற்பழக்கங்களைப் போதிப்பதே என்பதை மனதில் வைத்திருக்க வேண்டும் (Moral and Ethical Instruction).

சகோதரங்களோடு பிறப்பது இறைவன் கொடுத்த கொடை. அது ஒரு பலம் (Siblings represent safety). விளையாடக் கூட வேறு பிள்ளைகளைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. கவலைகளையும், சந்தோஷங்களையும் பகிர்ந்து கொள்ள சகோதரங்களை விட வேறு யாரால் முடியும். "தம்பியுள்ளான் சண்டைக்கு அஞ்சான்" என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள். சிறுவயதில் ஏற்படும் அன்பும், பாசமும் பின்பு வாழ்க்கை முழுக்க விருட்சமாக வளர்ந்து வயோதிபத்தில் கூட ஊன்றுகோலாக அமைகிறது. வாட்டர்லூ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த உளவியலாளர் Julia Smith என்பவர் சில முரண்பாடுகள் எந்தக் காலத்திலுமே இருக்கத்தான் செய்யும் என்கிறார். ஆகவே பிள்ளை வளர்ப்பில் சிறு பிள்ளைகளின் பிணக்குகளும் ஒரு பகுதி என நினைத்து (Part and parcial of child up bringing) பெற்றோர் சந்தோஷமாக அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தை விளைவிக்கும் கழிவுப் பொருட்களை அகற்ற இலகுவழி

ஆபத்தான கழிவுப் பொருட்களான பாவித்த பற்றரிகள், பெயின்ற் ரின்கள் போன்றவற்றை இதுவரை காலமும் வருடத்தில் ஒரு தடவை அல்லது இரு தடவைகள் குறிப்பிட்ட நாட்களில் மாநகரசபை சேகரித்து வந்தது. இது கிட்டத்தட்ட 16,000 தொன்கள் நிறையாகும்.

கடந்த மாதம் (தை), புதிய முறையாக, சில ரோனா, ஹோம் டிப்போ கடைகளில் இவற்றை ஒப்படைக்கக் கூடியதாக புதிய செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. www.dowhatyoucan.ca என்ற இணையத் தளத்தில், உங்கள் நகரத்தை அல்லது போஸ்டல் கோட்டை பதிவதன் மூலம் அண்மையில் உள்ள இந்தக் கழிவுகளை ஏற்றுக் கொள்ளும் கடை-களைக் கண்டறியலாம். அறிமுகப்படுத்தப்பட்ட சில வாரங்களுக்குள்ளேயே 15,000 இற்கும் மேற்பட்ட மக்கள் இத் தளத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

இம்முறை மூலம், ஆபத்தான இந்தக் கழிவுப் பொருட்கள் நிலத்தில் தேங்கும் நிலையை குறைப்பதுடன், 5 வருடங்களுக்குள் கழிவின் தொகையை இரண்டு மடங்காக அதாவது 32,000 தொன் அளவில் சேகரிக்க வேண்டுமென்ற இலக்கை சுற்றுச் சூழல் அமைச்சு கொண்டு செயற்படுகின்றது.

# பில்லியன் மக்கள் இன்ரர்நெற் பாவனை

உலகளாவிய ரீதியில் இன்ரர்நெற் பாவனையாளரின் எண்ணிக்கை பில்லியனை அடைந்துள்ளது என டிஜிட்டல் கணி நிறுவனமான comScore தெரிவித்துள்ளது. இதில் சீனாவைச் சேர்ந்தவர்கள் 18% வீதமாகும். அதாவது 180 மில்லியன் பாவனையாளர். அடுத்ததாக அமெரிக்க பாவனையாளர் 16.2% ஆகும். 163 மில்லியன் பாவனையாளர். கனடாவைச் சேர்ந்தோர் 2.2% பாவனையாளர் களுடன் 11வது இடத்தில் உள்ளது. அதாவது 22 மில்லியன் பாவனையாளர்.



பொன்னையா விவேகானந்தன்

## பொன்னின் பொழிகை

தொடர் 23

# முளை

விதைக்குள் இருந்து எழுகின்ற தாவர வளர்ச்சியின் தொடக்கம்.
அறிவின் எல்லை கடந்த இயற்கையின் அதிசயம்.

விண் தொட எழுகின்ற மரங்கள் எல்லாம் சிறு விதை தகர்த்து மேலெழுகின்ற முளையிற்தானே தெடங்குகின்றன.
விதைக்குள் புதைந்து கிடக்கின்ற முளையின் மர்மங்களை அறிய முயல்கின்ற போதெல்லாம் தோற்றுப் போகின்றது.
தலைமுறைகளைத் தக்க வைத்துக் கொள்ளும் உயிர்களின் வாழ்வில் விதைக்குள் உறங்கிக் கிடந்து முளை கொள்ளும் தாவர வாழ்வு நமக்கும் பல செய்திகளைத் தருகின்றது.

பலவாறாய்ப் பரவும் தாவர விதைகள் வீழ்ந்தவுடன் முளை விடுவதில்லை.
விலங்குகளைப் போன்று குறித்த கர்ப்பகாலம் விதைகளுக்கில்லை. முளை கொள்வதற்கான வாய்ப்பான சூழல் வரும்வரை காத்துக் கிடக்கின்றன இந்த விதைகள்.
இந்தக் காத்திருப்புக் காலம் சிலவேளை நூற்றாண்டு கடந்து நீளும்.

விதைகள் பெரும்பாலும் விழுந்த இடத்தில் கிடப்பதில்லை. உண்ணும் உயிர்களின் உடல் புகுந்து வெளியேறி விழுகின்றன எங்கெங்கோ.
காற்றோடும் மழையோடும் இழுபட்டு எங்கெல்லாமோ அலைந்து தேங்கிய இடத்தில் தங்கி விடுகின்றன சில விதைகள்.
இது விதைகளின் அவலம் அல்ல. இயல்பான வாழ்வு. தான் தோன்றிய மரத்தின் கீழ் விழுந்த விதைகள் வீரியமாய் எழுவதில்லை.
இயற்கை இயல்பாகவே வழங்கிய கடின ஓடுகள்தான் விதைகளின் கவசம்.

தனக்குள் இருக்கும் கருவைச் சுமந்தபடி, முளை கொள்ளும் வரை விதைகள் நடத்துகின்ற வாழ்வு ஒரு இலட்சியப் பயணம். மரம் கொடுத்த கருவை முளையாக்கும் வரையான தொடர் போராட்டம்.

ஒரு உயிரின் செமிபாட்டறை கடந்து உயிர்க்கும் வீரிய வாழ்வு விதைகளுக்கே உண்டு.

முளை கொள்ளுதல் என்ற ஒன்றே விதையின் உச்ச இலட்சியம். இலட்சியப் பிறழ்வுகள் விதைகளுக்கு இல்லை.

விழுந்த இடமொன்றில் முளைப்பதற்காய் தவமிருக்கின்றன விதைகள். ஓடாக இருப்பினும் சூழலை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் இவைக்கிருக்கின்றன. முளை கொள்ளும் காலத்தை அவை கணிக்கின்றன.
கரு மெல்ல உயிர்க்கின்றது.
கடும் வதைகளை ஓடுகளில் தாங்கிய விதை, உயிர்க்கும் கருவுக்காய் மெல்ல இளகி விடுகின்றது. முளையை மேல் நோக்கியும், வேரைக் கீழ் நோக்கியும் வளர வழி செய்து வளர்ச்சிக்கு உரமாய் தன்னை அழித்துக் கொள்ளகிறது.
மீண்டும் எழுகின்றது தாவரத்தின் தலைமுறை.

விதையின் வாழ்வு தன்னம்பிக்கையின் உயர்ந்த அடையாளம். பொறுப்பு மிக்க செயற்திறத்தின் வடிவம். முளையின் எழுச்சியை பிறரின் விருப்பு வெறுப்புகள் தீர்மானிப்பதில்லை. விதையே தீர்மானிக்கின்றது.

விதை என்பது தவம். முளை என்பது வரம்.

பன்னிரண்டு ஆண்டு கால தவத்தின் பின்னால் முளை கொள்ளுகின்றது குறிஞ்சின் விதை.
நீரற்ற நிலத்திலும் போரிட்டு வெல்கின்றது பனையின் முளை.
பாத்தி கட்டி பதியம் இட்டால் மட்டுமே சில விதைகள் முளை கொள்ளும்.

மண்ணெங்கும் புதைந்து கிடக்கின்றன, எண்ணில்லா முளைகள் விதைகளாக. காலம் கனிந்து முளை எழும்வரை ஊனக் கண்களுக்கு எல்லா முளைகளும் மண்ணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன் எழுதும்

பத்தாம் பக்கம்

# கவனம் கலைக்கும் சாலைகள்

சாரதிகளுக்கு சாலைகளில் எதில் அதிக கவனம் தேவை என மெதுவாக யாரிடமாவது கேட்டுப் பாருங்கள். 'வேகத்தில்' என்பதே வேகமாக அவர்களில் பலர் தரும் பதிலாயிருக்கும்.

இலங்கையில் வாகனங்கள் இடது புறத்தில் செல்லும். கனடாவில் வாகனங்கள் வலது பக்கத்தில் செல்லும். ஆனால் கிடைக்கும் இடைவெளியெங்கும் போதையிலுள்ள சாரதிகளின் வாகனங்கள் வேகமாக புகுந்து புறப்படுவதும் உண்டு.

சாலைகளை தாக்கும் தருணங்களாக பல சாகசங்கள் இமையாத இமைக்குள் விரவியும் பரவியும் திகிலூட்டுகின்றன.

ஓற்றையடி பாதைகள் காணாத காரணங்களை, காரணங்களாக காட்டுகின்றன கவனம் கலைக்கும் சாலைகள்.

மஞ்சள் விளக்கு வேகத்தை குறைக்க ஓர் எச்சரிக்கை என்பதனை மறந்து அதுவே வேகத்தை அதிகரிக்கும் சமிஞ்ஞை எனக் கருதுவது

குளிர் காலத்தில் ஜன்னல்களை கீழிறக்கி ஜம்பமாக காரோட்டுவது

கோடை காலத்தில் பாடல்களை அலறவிட்டு பாதையை அதிரவைப்பது

இங்கும் அங்குமாக அடிக்கடி 'லேன்களை' மாற்றுவது

சீரான வேகத்தில் வாகனத்தைச் செலுத்தாது திடீரென அதீத வேகத்திலும் பின்னர் சிறிது தூரத்தில் மிகமிக மெதுவாகவும் என மாறி மாறி செலுத்துவது

முன்னால் செல்லும் வாகனத்தை சீக்கிரமே நொருக்கி விடுமாப்போல நெருக்கமாக நெடுந்தூரம் தொடர்வது

மிகவும் குறுகியதாக அல்லது மிகவும் அகண்டதாக சந்திகளில் திருப்புவது

சந்திப்புகளிலுள்ள விளக்குகளுக்கு மிக அருகில் நிறுத்துவது அல்லது அநாவசியமாக அதிக தூரத்தில் நிற்பாட்டுவது

சாலைகளின் நாற்சந்திகளை விரைந்து பறப்பது அல்லது ஊர்ந்து நகர்வது

வாகனத்தை அதி பிரகாச வெளிச்சத்துடன் செலுத்துவது அல்லது முன் பக்க ஒளி சிற-றுமின்றி செலுத்துவது

என்ன அவசரம் சுற்றுவழியில் மெதுவாகப்போ என்று சொல்ல காதலிதான் காருக்குள் இல்லையே என கருதி ஒருவழிப் பாதைக்குள் மறுவழியால் நுழைவது

சும்மா செல்லும் போலிஸ்காரரைப் பார்த்து கண் சிமிட்டி வம்புக்கிழுப்பது

மதுவின் ஆதிக்கம் சீரான போக்குவரத்து விதிகளை மீற வைத்து நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை கூடுதலாக்கி சாலைகளை அலட்சியப்படுத்தி கவனத்தை சிதற வைத்து வளர்ந்த நாடுகளில் வளரும் விபத்துகளுக்கு வழி காட்டுகின்றது.

கோடை காலங்களில் பலர் நீர் நிலைகளில் படகுகளை செலுத்துவதில் ஆர்வத்தை அதிகரிக்கின்றனர்.

தண்ணீரில் படகினை செலுத்தும் பொழுது 'தண்ணியில்' இருந்தாலும் அபராதம் பெறுவதற்கு சட்டத்தில் இடமுண்டு.

மது அருந்த எடுக்கும் நேரத்திலும் பார்க்க உடலிலிருந்து அதனை அகற்ற அதிக நேரம் எடுக்கும். சகலருக்கும் ஒரேயளவு மது போதை ஊட்டுவதுமில்லை. சகல மது பானங்களும் ஒரே மாதிரி இருப்பதுமில்லை.

எனவே போதையால் வாழ்வில் பேதையாகாதீர்கள்: காலத்தை வீணே அகாலமாக்காதீர்கள்: பாதையை என்றுமே உபாதையாக்காதீர்கள்.

எமக்கான சமுகப் பொறுப்புகளில் சாலைகளை பாதுகாப்பதும் ஒன்று.

## நீங்கள் கவலையுடன் இருக்கிறீர்களா?

நீங்கள் மட்டுமல்ல, வடஅமெரிக்காவில் ஏறத்தாழ நான்கு மில்லியன் மக்கள் காலநிலை காரணமாக ஏற்படும் மந்தநிலையினால் கவலையுடனேயே இருக்கிறார்கள். இது ஒருவகை மன அழுத்தமாகும். அதனால் வாழ்க்கை நிலையை, தரத்தை பாதிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

கவலை என்பது, குளிர்கால மந்தநிலை எனப்படும் Winter Blue இனைவிட கூடிய பாதிப்பானதாகும் என்கிறார் ரொறன்ரோ மனோநிலைய ஆராய்ச்சியாளரான டாக்டர் ரோபேட் லெவிற்றன். பாடசாலையை இடை நிறுத்துதல், வேலையை இழத்தல், உறவுகளிடையே பிரச்சனைகள் போன்றவை இதற்கான முக்கிய காரணிகளாகலாம் என்னும் இவர் ரொறன்ரோ பல்கலைகழகத்தில் மனோவியல் நிபுணராகவும் இருக்கிறார்.

பலர் இதனை சரியாகக் கவனத்தில் எடுப்பதில்லை. போஸ்ரனிலுள்ள ஹாவார்ட் மருத்துவ கல்லூரியின் இணைய தகவற் தபாலில் இதன் அடையாளங்களாக, சந்தோஷமற்ற மனநிலை, சக்தியற்ற நிலை, உபயோகமின்மை போலுணர்தல், கவனஞ் செலுத்த முடியாதிருத்தல், கட்டுப்படுத்த முடியாதபடி இனிப்பு பதார்த்தங்கள், மாப்பொருள் பதார்த்தங்களை உண்ணத் தூண்டப்படுதல் என்பன காணப்படும்.

பலருக்கு, இக் கவலை நிலை இலையுதிர் காலத்தில் தொடங்கி, பனிக் காலத்தில் கூடி, வசந்த காலத்தில் குறைந்து செல்லும். அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது முக்கியமான ஒரு அறிகுறியாகும். 70% இற்கும் அதிகமானவர்கள் மாப்பொருளை அதிகளவில் உண்ண தூண்டப்படுவதுடன், நிறையும் குறிப்பிட்டளவில் அதிகரிக்கும் என்கிறார் டாக்டர் ரோபேட்.

## ஈரலுக்கு உதவும் அஸ்பிரின்

அஸ்பிரின் மருந்தானது, ஈரலில் ரொக்சின்களினால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு உதவுவதாக பல்கலைக்கழக ஆய்வொன்று தெரிவிக்கின்றது. மருந்துகள், மது, மற்றும் குருதியில் காணப்படும் ரொக்சின்கள் போன்றவற்றினால் ஈரலில் காயங்கள் ஏற்படுகின்றது. அஸ்பிரினில் காணப்படும் acetylsalicylic acid என்னும் பொருள், இவற்றின் பாதிப்புகளை தடுப்பதுடன், ஈரலில் ஏற்படும் காயங்களையும் குறைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் கல்விக்கும், தொழிற்பயிற்சிக்கும் $2 பில்லியன் டாலர்கள்

கனடாவின் 2009ஆம் ஆண்டின் நிதி அறிக்கையில், 2 பில்லியனுக்கும் அதிகமான தொகை கல்விக்கும், பயிற்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1.5 பில்லியன் அண்மையில் வேலையிழந்தோருக்கும், அதாவது வேலையில்லாக் காப்புறுதியில் உள்ளவர்களுக்கும், வேலை பார்க்காதபடியினால் வேலையில்லாக் காப்புறுதி பெற முடியாது இருந்தோருக்கும் பயிற்சிகளையும், கல்வியையும் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளைப் பராமரிக்கும் தாய்மார்களும் இந்தத் திட்டங்களின் கீழ் பயிற்சிகளைப் பெற முடியும். 500 மில்லியன் டாலர்கள், நீண்ட கால வேலை அனுபவம் உடைய, தற்போது வேலையிலிருந்து நீக்கப்பட்டோருக்கு வேறு வேலையைத் தேடிக் கொள்வதற்கு பயிற்சிகளை வழங்குவதற்குப் பாவிக்கப்படும்.

## மரக்கறி உணவுண்ணும் சிறுவர்களின் உணவில் ஊட்டச்சத்து

மரக்கறி உணவு வகைகளை மட்டுமே உண்ண வேண்டுமெனத் தீர்மானித்திருக்கும் பிள்ளைகளின் உணவுகளில் பற்றாக்குறையாக காணப்படக் கூடிய ஊட்டச் சத்துகளை நிரவுவதில் அதிக கவனம் எடுத்தல் அவசியம். மாமிச வகைகளிலிருந்து பெறப்படும் புரதம், இரும்புச் சத்து, நாகச் சத்து, கல்சியம், உயிர்ச்சத்து D என்பனவற்றை மரக்கறிப் புரதங்களான சோயா, சோயாப் பால், விதைகள் போன்றவற்றை உணவில் சேர்ப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மரக்கறி உண்ணும் சிறுவர்கள் பால், முட்டை என்பவற்றை உணவில் சேர்க்கையில் அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளில் அனேகமானவற்றைப் பெறலாம். ஆனால், பால் பொருட்களைத் தவிர்க்கும் சிறுவர்களின் உணவில் அதிக கவனம் எடுத்தல் அவசியம் என பொஸ்ரன் சிறுவர் மருத்துவ நிலைய வைத்திய நிபுணர் டேவிட் தெரிவித்துள்ளார். சிறுவர்களின் உணவில் சத்துக் குறைபாடுகள் இல்லாது பார்த்தல் அவசியம் என்கிறார்.

குழந்தைகள் பிறந்ததிலிருந்தே மரக்கறி உணவுப் பழக்கத்தை ஆரம்பிக்கலாம். தாய்ப்பால் அல்லது அயனூட்டப்பட்ட பால் முதல் ஆறு மாதங்களுக்கு கொடுத்தல் அவசியம். சோயா பால் வகைகளை உணவில் சேர்ப்பது விருப்பத்தை பொறுத்தது.



குயின்ரஸ் துரைசிங்கம்

**கணினிப் பக்கம்** 28

## காக்க காக்க கணினி காக்க...

கணினி என்றால் என்ன, கணினியின் பல்வேறு பிரிவுகள், அலகுகள் மற்றும், எழுத்துருக்கள், எழுத்துருக்களின் வளர்ச்சி, மாற்றங்கள், யூனிகோட் எழுத்துருவின் நன்மை தீமைகள் என்று பலவற்றையும் இதுவரை பார்த்தோம். தொடர்ந்து, கணினியுலகில் பரவலாக பொதுமக்களால் பாவிக்கப்பட்டு வருகின்ற புதிய தொழில்நுட்பங்களை ஆராய்ந்து, அவற்றின் நன்மை தீமைகள் பற்றிப் பார்க்கலாம்.

கடந்த சில வருடங்களாக, வொய்ப் என்றழைக்கப்படும் ஒருவகை தொலைபேசி சேவை, நுகர்வோர் பாவனைக்கென பெரிதும் புழக்கத்திலுள்ளது. மிகவும் மலிவு விலையில் தொலைபேசி அட்டைகள் பாவனைக்கு வந்திருப்பதற்கும், பல்வேறு தொலைபேசிச் சேவைகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுவதற்கும், இந்த வொய்ப் தொழில்நுட்பம் அடிப்படையான பின்புலக் காரணமாக அமைகிறது.

இது குறித்த சில தகவல்களைப் பார்க்கலாம். வொய்ப் (VoIP) என்றால், கணினியூடான தொலைபேசி சேவை என்று சுருங்கச் சொல்லலாம். Voice over Internet Protocol, IP Telephony, Internet Telephony, Broadband Telephony, Broadband Phone, Voice over Broadband, VoIP என்று இன்னோரன்ன பல பெயர்களில் அறியப்பட்ட இந்த இலத்திரனியல் ஒலி பரிமாற்றுச் சேவை, கணினி உலகில் வேகமாக வளர்ந்து, பரவலாகப் பாவனையில் உள்ளது.

இணையத் தளங்களை (internet) மேய்ந்து வருவதை நாம் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தால், அந்த சேவைக்குப் பின்னே, ஐபி (IP) முகவரி பாவிக்கப்படு கிறதென்ற தத்துவத்தையும், இன்ரநெற் புரொட்டக்கொல் (Internet Protocol) என்ற பெயரில், இணையத் தொடர்புக்கான மொழியாக இந்த IP பயன்படுகிறதென்ற விளக்கத்தையும் நாம் சிலவேளை அறிந்திருக்கலாம்.

சாதாரண கணினியுலகில், இலத்திரனியல் மொழியாகப் பாவிக்கப்பட்டு வருகின்ற இந்த IP பாஷையை, ஒலி பரிமாற்றத்திற்கான பிறிதொரு வடிவமாக்கி, வொய்ஸ் (voice) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் குரல் அதாவது ஒலிவடிவத்தை பரிமாற்றம் செய்கின்ற புதிய உத்தியை, வொய்ப் (VoIP) என்று அழைக்கிறார்கள்.

இலகு தமிழில் சுருக்கமாக விளக்குவதாக இருந்தால், தொலைபேசி அழைப்புக்களை, இன்ரநெற் ஊடாக அனுப்புவதாகவும் மீளப் பெறுவதாகவும் கொள்ளலாம். அதாவது, தொலைபேசிக்கென பாவனையிலுள்ள பிரத்தியேக தொலைபேசி இணைப்பை, இணைப்பு வலையைப் பயன்படுத்தாமல், ஒலிவடிவத்தை அப்படியே இணையத்தினூடாக பரிமாற்றம் செய்வதற்கான புதிய சேவை, இந்த VoIP என்று விளக்கலாம்.

கணினியுலகில், குறிப்பாக நவீன இலத்திரனியல் உலகில், தகவல் பரிமாற்றங்கள் அனைத்தும் இலத்திரனியலாக மாறியிருப்பதால், ஒரேயொரு இலத்திரனியல் கருவியில், அனைத்து கணினிப் பரிமாற்றங்களையும் செய்துகொள்வதற்கு ஏதுவான சூழல் உருவாகவேண்டிய கட்டாய நிலை தோன்றிவிட்டது.

தற்போது பரவலாக பாவனையிலுள்ள தொலைபேசி சேவைகளுக்கு மாற்றீடாக, இணையவலை ஊடாக (Internet), தொலைபேசி (telephone), தொலைநகல் (fax) சேவைகளை வழங்குவதே குறிப்பாக இந்த VoIP என்று அழைக்கப்படுகிறது. ஆங்கில விரிவாக்கத்தை அவதானித்தால், Voice over Internet Protocol என்ற விளக்கத்திலிருந்து, இன்ரநெற் ஊடாக, ஒலியைப் பரிமாற்றம் செய்யும் ஊடகம் இது என்று தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## ஒரு கடவுச் சீட்டு(க்கு) ஆயிரம் டாலர்கள்!

மூன்று பிள்ளைகளின் தந்தை அவர்; ரொறன்ரொ பெருநகரில் வசிப்பவர்.

அவசரமாகத் தமது நண்பர் ஒருவரிடம் 1160 டாலர் கடன் கேட்டார். "எதற்காக இப்படியொரு தொகை அவசரமாகத் தேவை?" என்று நண்பர் திருப்பிக் கேட்டார்.

தனது கடவுச் சீட்டை(பாஸ்போர்ட்) பெறுவதற்காக பணம் தேவை என்றார். கடவுச் சீட்டுக் கட்டணம் நூறு டாலர்களுக்கும் குறைவு; இவர் எத்தனை கடவுச் சீட்டுகள் பெறவுள்ளார் என்று நண்பர் மண்டையைப் பிளந்தார்.

விடயம் பின்னரே தெரிய வந்தது. இதுதான் கதை: நான்கு மாதத்துக்கு ஒருவரிடம் 1000 டாலர் அவர் கடனாகப் பெற்றிருந்தார். வட்டி மாதம் நாற்பது டாலர்கள். கடனுக்குப் பிணையாக கடவுச்சீட்டு கொடுத்தால் மட்டுமே கடன் கொடுக்கப்படுமாம்.

இப்போது வட்டியும் முதலுமாக 1160 ஆகி விட்டதால், கடன் கொடுத்தவர் நெருக்குகிறாராம்! ஒருவரது கடவுச் சீட்டை மற்றொருவர் வைத்திருப்பது கிரிமினல் குற்றம் என்பது இருவருக்கும் தெரியாது போலும்!

## மு.க முகத்தில் கரிப் பூச்சு!

ஒரு தியாகியின் மரணத்தைக்கூட அரசியலாக்கி வியாபாரம் செய்வதில் முத்துவேலு கருணாநிதிக்கு நிகர் யாருமில்லை.

இளைஞன் முத்துக்குமார் இனமானம் நிறைந்த ஊடகவியலாளர்; தமிழீழ உறவுகளின் அவலத்தையும், இந்தியாவின் துரோகத்தையும் கண்டு பொறுக்க முடியாத இவர், கடந்த மாத இறுதியில் தமது உடலுக்குத் தீமூட்டி வீரமரணம் எய்தினார்.

தமிழகம் இதனால் பொங்கி எழுந்தது. மாணவ சமூகம் எரிமலையாகக் குமுறியது. அலையலையாக மக்கள் திரண்டெழுந்தனர். எதுவுமே செய்ய முடியாத கருணாநிதியின் மூளைக்குள் ஒரு வரட்டு எண்ணம் முளை விட்டது.

முத்துக்குமார் குடும்பத்துக்கு இரண்டு லட்சம் நிதி வழங்குவதாகத் தமது மகன் ஸ்டாலின் மூலம் அறிவித்தார். தியாகியின் மரணத்தை விலைக்கு வாங்கி, அதில் அரசியல் லாபம் தேட முனைந்த மு.கவின் முகத்தில் தியாகி குடும்பத்தினர் முழுக்கரி பூசிவிட்டனர்.

நிதியைப்பெற அவர்கள் மறுத்து விட்டனர். அத்துடன் இறுதி சடங்குக்குச் சென்ற தி. மு. க சட்டசபை உறுப்பினர் பாலுவின் முகத்துக்கு செருப்பெறிந்து அவரை வெளியேற்றி விட்டனர் மக்கள்.

## கடைந்தெடுத்த கபடம் படுதோல்வி கண்டது

இதுவும் தமிழகத்துச் சமாசாரம்தான். கடந்த மாதக் கடைசி நாளன்று மதுரையைச் சேர்ந்த ரவி என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை, தீ மூட்டி உயிர் துறக்க முடிவு செய்தார். விடுதலைப் புலிகளின் அபிமானியான இவர் தமது முதலாவது மகனுக்கு பிரபாகரன் என்றே பெயர் வைத்துள்ளார்.

நெருப்பிலெரிந்த இவர் மதுரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்குதான் தமிழக அரசின் உத்தரவுப்படி ஒரு கபட நாடகம் அரங்கேற ஆயத்தமானது.

ஈழத்தமிழர் விடயத்தில் இந்திய அரசைக் கண்டித்து ரவி தமக்குத் தாமே தீ மூட்டினார் என்பதை மறைத்து, சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து அவர் படுகாயமடைந்ததாக பதிவில் சேர்க்க காவற்துறையினர் பகீரத முயற்சி எடுத்தனர்.

ஆனால், கொதித்தெழுந்த ரவியின் மனைவி பிள்ளைகள் அந்த முயற்சியை முறியடித்து, கருணாநிதி ஆட்சியின் கேவலத்தை அம்பலமாக்கியுள்ளனர். பாவம் காவற்றுறையினர்; அம்பை நொந்து என்ன பயன்?

**உதாசனன்**
**உலா விருந்து**

## ஒரு பிச்சைக்காரரின் உண்மையான கணக்கெடுப்பு

நடுத்தர வயதினரான, வெள்ளைத் தோல் பிச்சைக்காரர் அவர். இதுவே அவரது நிரந்தரத் தொழில்.

யுனியன் சப்வே அமைந்துள்ள வீதியின் ஒரு மூலை, பகல் வேளையில் இவரது நிரந்தர இருப்பிடம்.

கடந்த மாதம் 30ஆம் திகதி தமிழரின் மனிதச் சங்கிலிப் பேரெழுச்சியின் மையப் புள்ளி இந்த இடம்தான். தமிழர் கைகளில் இருந்த பதாதைகளைப் படித்த அவர், அங்கு நின்றவர்களிடம் விடயங்களைக் கேட்டறிந்தார்.

தமிழர்கள் படுகொலை அவரை நிரம்ப வேதனையடையச் செய்தது. தமது தினசரி வருமானத் தொழிலையும் மறந்து, பதாதைகள் சிலவற்றைப் பெற்று தாமும் மனிதச் சங்கிலியுடன் ஒன்றிணைந்து விட்டார்.

பேரெழுச்சி முடிவின்போது அவர் கொடுத்த வாக்குமூலம், "இதுவரை பல பேரணிகளை இங்கு பார்த்துள்ளேன். ஆனால் இவ்வளவு தொகை மக்கள் கலந்து கொண்டதை ஒருபோதும் நான் பார்த்ததில்லை" என்பது.

இந்த வேற்றினப் பிச்சைக்காரருக்கு ஏற்பட்டுள்ள உணர்வுகூட இங்குள்ள எம்மவர் பலருக்கு வரவில்லையே!

## அமெரிக்கர்கள் மத்தியில் விவாகரத்துகள் குறைகின்றன?

அமெரிக்காவில் கடந்த சில மாதங்களாக விவாகரத்துகள் குறைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சியான செய்தி என்றுதான் பலரும் நினைப்பர். ஆனால் உண்மை அதுவல்ல.

அமெரிக்காவின் பொருளாதார நிலை மோசமடைவதால், வழக்கறிஞர் செலவு, பிள்ளைகள் பராமரிப்புக்கான பணம், தனித்தனியாகப் பிரிந்து வாழ இரு வீடுகளுக்கான வாடகை, வாழ்க்கைச் செலவு போன்றவைகளுக்குப் பணத் தட்டுப்பாடு நிலவுவதே பலரையும் விவாகரத்துக்குச் செல்லாமல் தடுப்பதாக அங்குள்ள ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

என்ன உலகமடா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலநிலை மாற்றங்கள் மாற நீண்ட காலம் தேவை!

பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய காலநிலை மாற்றங்கள் நீண்ட காலத்திற்கு மாற்ற முடியாதவையாக உள்ளன என அண்மைய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. உடனடியாக பல்வேறு வழிகளிலும் கார்பன் டைஒக்சைட் வெளியேற்றத்தினை குறைப்பதன் மூலம் 100 அல்லது 200 வருடங்களில் காலநிலை மாற்றங்களை பழைய நிலைமைக்கு கொண்டு வந்துவிடலாம் என பலரும் நம்பினர். ஆனால் குறைந்தது 3000வது வருடம் வரை இந்நிலைமைகளில் மாற்றம் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் வெப்பநிலை மாற்றங்கள் கூடவாகவே இருக்கப் போகின்றது.

## சந்தோஷமான முதுமை வாழ்க்கை

பிள்ளைகள் வளர்ந்து தம் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு, வீட்டை விட்டு போன பின், பெற்றோர் மட்டும் தனியே வசிக்கும் போது தனிமையிலும், மன அழுத்தத்திலும் வசிப்பது குறைந்துள்ளதாக லண்டன் பேர்க்லே பல்கலைக்கழக மனநோய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். செய்வதற்கு ஒன்றுமில்லாமல் கையைப் பிசைந்து கொண்டு பிள்ளைகள் எப்போது தொலைபேசியில் அழைப்பார்கள் என எதிர்பார்த்துக் கொண்டிராமல், தமது துணையின் அண்மையை அனுபவிப்பதாக இவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

மணமாகி 18 வருடங்களுக்கு மேற்பட்ட பெண்களை வைத்து ஆராய்ந்த போது, பெண்களின் திருமண வாழ்க்கையில் வயதாக ஆக அவர்களின் வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிப்பதாக கூறப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் அவர்கள் பிள்ளைகளை விரும்பவில்லை என்பதல்ல. பிள்ளைகள் போனபின், கணவருடன் நல்ல விதத்தில் பொழுதுகளைக் கழிப்பதில் அவர்கள் சந்தோஷமடைகின்றனர் என்பதே.

## புளூ வைரசுக்கு டயட்டிங் உதவலாம்!

குளிர் காலங்களில் டயட்டிங் இருப்பது புளூ வைரஸ் பரவுவதற்கு உதவலாம் என மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளனர். உட்கொள்ளும் கலோரிகளின் அளவைக் குறைப்பதனால் எதிர்த்துப் போரிடும் கலங்களின் சக்தி குறைக்கப்படுகின்றது. இதனால் வைரசுத் தொற்றுகளை எதிர்ப்பதற்கு சக்தி போதாமல் போவதால் நோய்த் தாக்கம் கூடுதவதற்கு வாய்ப்பாகின்றது. கலோரி குறைந்த டயட்டிங் இருப்பதை வெம்மையான காலங்களில் செய்வது



ரஞ்சி திரு

## சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோவில் குடும்ப வைத்தியர் இல்லாமல் வாழ்ந்து வரும் சுமார் ஐந்து லட்சம் மக்களுக்கான மாற்று ஏற்பாட்டினை ஒன்ராறியோ சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. இவர்களுக்கென தனியான 24 மணி நேரத் தொலைபேசி இலக்கமொன்று (hot line) இந்த மாதத்தில் ஏற்படுத்தப்படவுள்ளது. இது 1-800 தொடரில் கட்டணம் செலுத்தாத இலக்கமாக இருக்கும். Telehealth Ontario என்ற அமைப்பின் பணியாளர் ஒருவர் வாரத்தின் 7 நாட்களும், 24 மணி நேரமும் இந்த இலக்கத்தில் பதிலளித்து, உரிய ஏற்பாடுகளைச் செய்வார்.

வேலையற்ற கால காப்புறுதித் திட்டத்தில் (Employment Insurance - EI) பல வருடங்களின் பின்னர் சிறு மாறுதல் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், வேலையிழந்த ஒருவருக்கு மத்திய அரசினால் வழங்கப்படும் காப்புறுதிப் பணம் வழங்கப்படும் காலம், மேலும் ஐந்து வாரங்களால் நீடிக்கப்பட்டுள்ளது. கனடிய மத்திய அரசின் புதிய வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ரொறன்ரோ போக்குவரத்துச் சேவையை (Toronto Transit Commission - TTC) சீர்செய்யவும், சிறப்பாக்கிப் புனரமைக்கவும் மக்களின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன. புதிய பாதைகளில் சேவையாற்றுதல், புதிய தரிப்பிடங்களை உருவாக்குதல், ஓட்ட இடைவெளி நேரத்தை மாற்றுதல் போன்ற எந்த விடயத்திலும் ஆலோசனையை வழங்கலாம். மேலதிக விபரங்களை 416 393 3030 இலக்கத்தில் அல்லது www.ttc.ca இணையத் தளத்தில் பெறலாம்.

கனடிய உள்ளூர் தபால் சேவைக்கான முத்திரைக் கட்டணம் 52 சதத்திலிருந்து 54 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக வருட ஆரம்பத்தில் ஒரு சதத்தினால் மட்டும் அதிகரிக்கப்படும் முத்திரைக் கட்டணம் இம்முறை 2 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க மற்றும் சர்வதேச நாடுகளுக்கான சாதாரண தபால்களுக்கான முத்திரைக் கட்டணத்திலும் அதிகரிப்புக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ரொறன்ரோ மத்தியிலுள்ள யுனியன் ரயில் நிலையத்திலிருந்து, பியர்சன் சர்வதேச விமான நிலையத்துக்கான GO ரயில் சேவையை ஆரம்பிக்கும் திட்டம் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் துறையின் ஆதரவையும் பெற்று இதனை நிறைவேற்ற ஒன்ராறியோ அரசு விரும்புகின்றது. இது தொடர்பாகப் பொதுமக்கள் ஆலோசனைகளைப் பெறும் ஆறு அமர்வுகள் விரைவில் இடம்பெறவுள்ளன. ஆலோசனைகளை www.metrolinx.com மூலமும் வழங்கலாம்.

தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கென இயங்கும் கம்பனி பென்ஷன் (company pension) திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த ஒன்ராறியோ மாகாண அரசு ஆலோசித்து வருகின்றது. ஏற்கனவே பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேர்ட்டா ஆகிய மாகாணங்கள் இந்த மாற்றத்தை அங்கீகரித்துள்ளன. மத்திய அரசாங்கத்தினால் நடைமுறைப்பட்டுவரும் CPP எனப்படும் ஓய்வூதியத் திட்டத்துக்குப் புறம்பாக கம்பனி பென்ஷன் திட்டம் செயற்பட்டு வருகின்றது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் பராக் ஒபாமா, தமது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்த மாதம் 19ஆம் திகதி கனடாவுக்கு வருகை தரவுள்ளார். முழுமையான நிகழ்ச்சி நிரல் இன்னமும் வெளியிடப்படவில்லை. அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள முதலாவது ஆபிரிக்க அமெரிக்கர் ஒபாமா. அமெரிக்க வெளியுறவு அமைச்சராக முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனின் மனைவியான ஹிலாரி கிளின்ரன பதவியேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ. கனகசபாபதி
மகாஜன முன்னாள் அதிபர்

# அதிபர் பிரயாணம் - 7

பாடசாலையின் உப அதிபருக்குரிய குணாதிசயங்களாக எவை எவை இருக்க வேண்டும் என நான் சில வரைமுறைகளை வைத்திருந்தேன்.

1. அதிபர் எடுக்கின்ற அத்தனை தீர்மானங்களையும் அப்பட்டமாக ஆதரிக்கும் நெகிழ்ச்சியான உளப்பாங்கு. இது விசயத்தில் அவருக்கென்று ஒரு தனிப்பட்ட அபிப்பிராயம் இருக்குமாயின் அதை அதிபரிடம் பிரத்தியேகமாகச் சொல்லி, அவர் அதனை ஏற்காத பட்சத்தில் அதனைத் தியாகம் செய்யவேண்டும். அதிபருக்கு எப்பொழுதும் துணை நிற்க வேண்டும். (கட்டுப்பெட்டியான ஒரு மனைவி போல என வைத்துக் கொள்ளுங்களேன்)
2. அதிபருக்கும் ஆசிரியருக்குமிடையேயான ஒரு சிறந்த தொடர்பாளராக அமைய வேண்டும். ஆசிரியர்களுடன் நட்புரிமையுடன் பழகுவதால் அவர்கள் கணிப்பில் அதிபர் எப்படி உள்ளார் என்பதை அறிந்து அதிபருக்கு அவற்றினை எடுத்துக்கூற முடியும். பாடசாலை நிர்வாகம் அதனால் சிறப்பாக நடைபெற முடியும்.
3. பெற்றோர் பழைய மாணவர்களுடன் சீரிய நட்புடையவராய் இருக்க வேண்டும்.
4. மாணவர்களின் ஒழுங்காட்சியில் மிகவும் கரிசனம் காட்டுபவராக இருக்க வேண்டும்.
5. இவை எல்லாவற்றிற்கு மேலாகத் தன் கடமையுணர்ச்சி மிக்கவராக பாடங்களை சிறப்பாகப் போதிக்கும் தகைமை உடையவராக இருக்க வேண்டும்.

திரு சிவஞானம் அவர்கள் மிகவும் கண்ணியமானவர். உப அதிபர் என்பவருக்கான என் கணிப்பினுக்கு அப்படியே அச்சொட்டாகப் பொருந்தியவர்.

திரு. சிவஞானம் அவர்கள் ஒரு கலைப்பட்டதாரி. புவியியல் கற்பிப்பதில் கை தேர்ந்தவர். சிறப்பான ஆசிரியர் என மாணவர்களிடையே நற்பெயரீட்டியவர். தனது கடமையில் என்றுமே தவறாதவர். பாடசாலைக்கு அவர் வராது நின்ற நாட்கள் மிகமிகக் குறைவு. ஆகவே என் கணிப்புக்கு ஏற்ற உப அதிபராக அவர் திகழ்ந்ததில் ஆச்சரியமில்லை. இதில் என்ன வேடிக்கை என்றால், பாடசாலை உப அதிபர்களுக்கு கல்வித் திணைக்களம் எந்தவிதமான மேலதிக வேதனத்தினையும் கொடுப்பதில்லை. பாடசாலையிலும் நேரசூசி அமைக்கும் பொழுதும் அவருக்கு ஒரு சிறு சலுகை கூடக் காட்டப்படுவதில்லை. ஏனைய ஆசிரியர் போலத்தான் வேலைப்பளு.

திரு. சிவஞானம் அவர்கள் என்னுடன் மூன்று வருடங்கள் மாத்திரமே கடமையாற்றினார்.



அறுபது வயது எல்லையை அடைந்தமையால் அவர் ஓய்வு பெறவேண்டி வந்து விட்டது. அது எனது துரதிருஷ்டம் என்றே சொல்வேன். அவர் ஓய்வு பெற்றதும் பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றியவரும், மற்றையோரிலும் மூத்தவருமான திரு. ஆறுமுகதாசனை உபஅதிபராக்கினேன்.
திரு ஆறுமுகதாசன் பல விடயங்களில் திரு. சிவஞானத்திற்கு நேர்மாறானவர். சுதுமலையிலிருந்து தினசரி ஈருருளியில் வருவார். அவசர அவசரமாகப் பாடசாலை தொடங்கும் நேரத்தில் வந்து சேருவார். அதே போன்று பாடசாலையின் முடிவு மணியடித்ததும் பாடசாலையை விட்டுப் போய்விடுவார். ஆகவே பாடசாலை நிர்வாகம் பற்றி அவருடன் நான் கலந்துரையாடுதற்குப் போதிய அவகாசம் கிடைத்ததில்லை. பாடசாலைக்கு வராத மாணவர்கள் அதற்கான காரணத்தை விளக்கும் பெற்றோர் கடிதம் ஒன்றினைக் கொண்டு வந்து என்னிடம் காட்டிய பின்னர், அதனை வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது பாடசாலையில் நான் ஏற்படுத்திய விதி. பாடசாலை வராதவர்கள் மறுநாள் காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் வந்து உத்தரவினைப் பெற வேண்டும். ஆகவே இந்த மாணவர்களது கடிதங்களைப் பார்த்துத் தண்டிக்கும் பொறுப்பினை அவரிடம் ஒப்படைத்தேன். இதனால் அவரைப் பாடசாலைக்குச் சற்று முன்னராக வர வைக்கலாம் என்பது எனது கனவு. கனவு கனவாகவே முடிந்தது. மாணவர்கள் வந்து உப அதிபரின் பார்வைக்காக அலுவலகத்திற்கு முன்பு வரிசையாக நிற்பார்கள். இவரோ வழமைபோல வந்து அவசர அவசரமாக அவர்கள் கொண்டு வரும் கடிதங்களில் ஒப்பமிட்டுக் கொடுத்து விடுவார். ஆகவே மாணவருடைய பாடசாலை வராமையிலேயோ அல்லது இவரது பாடசாலை வருகையிலேயோ எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே, நான் அலுவலகத்திற்கு வெளியே நின்று இடையிடையே மாணவர்கள் கொண்டு வரும் கடிதங்களைப் பார்த்து அவற்றினது நம்பகத் தன்மைக்கு ஏற்ப பிரம்படி கொடுத்தேன். இது அவருக்கத் தெரிய வந்திருக்க வேண்டும். ஒரு நாள் எனது மேசையில் தட்டச்சு செய்யப்பட்ட கடிதம் ஒன்று இருந்தது. தான் உப அதிபர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.
திரு. சிவஞானம் அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் எனக்கு பெரிதும் ஆலோசனைகள் தருபவராக பண்டிதர் சுப்பிரமணியம் அவர்கள் இருந்து வந்தார்கள். அவர் நல்ல தமிழ் அறிஞர். அடக்கமானவர், எளிமை மிக்கவர், யாருடனும் அந்நியோன்யமாகப் பழகும் பண்பாளர், வாய் நிறைய வெற்றிலையும், நெற்றியில் தீருநீற்றுக் கீற்றின் நடுவிலே சந்தனப் பொட்டும், அதனுள்ளே சிறு குங்குமப் பொட்டுமாக சைவப் பழமாகக் காட்சி தருவார்.

அன்று மாலை பண்டிதரிடம் இது பற்றிக் கூறினேன். பண்டிதர் தனது வழமையான குழந்தைச் சிரிப்புடன் 'அக்கடிதத்தை, நான் தான் தட்டச்சில் செய்து கொடுத்தேன்' என்றார். தனக்கு தட்டச்சுச் செய்ய முடியாது எனவும் செய்து தருமாறும் கேட்டதாகச் சொல்லிய பண்டிதர் அவர்கள் காலையிலே பாடசாலை வராத மாணவர்களை சந்திக்கின்ற பொறுப்பினை என்னையே ஏற்குமாறு ஆலோசனை சொன்னார். அதன்படி நான் அந்தப் பொறுப்புகளை ஏற்றேன். ஆறுமுகதாசன் மீண்டும் உப அதிபராகக் கடமையாற்றினார்.

**முதல் நாள் பாடசாலை அனுபவம்:**
பாடசாலையின் பிரதான பகுதி இரண்டு 20 அடி அகலமும் 100 அடிநீளமுமான இரண்டு மண்டபங்களைக் கொண்டது அதன் முற்புறத்தில் ஒரு புறத்தில் அதிபர் அறை அதற்கு நேரெதிராக எதிர்ப்புறத்தில் ஆசிரியர் தங்கும் அறை. அந்தப் பக்கத்து மண்டபத்தின் மறு புறத்திலே சோமஸ்கந்தர் விக்கிரகத்தைக் கொண்ட சந்நிதி உள்ளது. தினசரி காலை வேளைகளில் ஒரு பிராமணப் பையன் வந்து பூசை செய்வதுண்டு.

ஆலயத்திற்கும் ஆசிரியர் அறைக்கும் இடையிலே ஐந்து வகுப்பறைகள் உள்ளன. மறுபுறத்திலே அதிபர் அறைக்கு அடுத்தாக நூல் நிலையம் அதனைத் தொடர்ந்து மூன்று ஆய்கூடங்களும் ஒரு களஞ்சிய அறையும் உள்ளன.

மறுநாள் காலை பாடசாலை சென்றேன். திரு. சிவஞானம் வருவதற்கு முன்னர் என்னை வந்து ஒருவர் சந்தித்தார். குள்ளமான உருவம், வெற்றுடம்பு. நரைத்த முடியுடன் வேட்டியை மடித்துக்கட்டியபடி அசட்டுச் சிரிப்புடன் வந்தவர்,



'ஐயா என் பெயர் சின்னக்குட்டி. நான் குமாரசாமி ஐயா காலத்தில் அலுவலகத்தில் வேலை பார்த்தேன்' என்றார். அதற்குள் திரு. சிவஞானம் வந்து விட்டார். அவர்

(33ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடிய தமிழ் மகளிர் அமைப்பு

# கவனயீர்ப்பு - இந்தியத் தூதரகம் முன்னால்









நிகழ்வின் பதிவு

கோகுலன்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடிய தமிழ் மாணவர் அமைப்பு

# கவனயீர்ப்பு -சிறீலங்கா துணைத்தூதரகம் முன்னால்










நிகழ்வின் பதிவு
கோகுலன்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடியத் தமிழர் சமூகம்

# கவனயீர்ப்பு -அமெரிக்கத் தூதரகம் முன்னால்















நிகழ்வின்
பதிவு
கோகுலன்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வின் பதிவு
கோகுலன்

# ரொறன்ரோ நகரை முடக்கிய கனடியத் தமிழரின்

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழரின் மனிதச் சங்கிலி பேரெழுச்சி - 2009 ஜனவரி, 30






















காணிக்க வந்த குதிரைச் சங்கிலி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரொறன்ரோ 'சன்' பத்திரிகை அலுவலகத்தின் முன்னால் கவனயீர்ப்பு









நிகழ்வின் பதிவு

கோகுலன்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணின் பொழுது - 11


சிவாஜினி பாலராஜன்

## காய்கனி சிற்பக்கலை



பழவகைகளையும் மரக்கறியையும் வெட்டி அழகு படுத்தும் கலை இற்றைக்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னதாக தாய்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது முதன் முதலில் தாய்லாந்து மன்னரை மகிழ்வூட்டுவதற்காக அரசனின் அந்தப்புரத்தில் வேலை பார்க்கும் பெண்ணினால் ஆரம்பிக்கப் பட்டதாக அறியப்படுகின்றது. அதன் பின்னர் படிப்படியாக உலகம் முழுவதும் பிரசித்தமானது. அதுமட்டுமன்றி தற்போது இக் கலை தாய்லாந்தில் சிறார்களுக்கு 11 வயது முதற்கொண்டு புகட்டப்பட்டு வருகின்றது.


இவ்வாறான இக் கலை இன்று எங்களவர்கள் மத்தியிலும் ஓரளவிற்கு பிரபலமாக இருக்கின்றது. பொதுவாக பிறந்தநாள் களியாட்டங்களிலும் திருமண வரவேற்பு வைபவங்கள் போன்ற கொண்டாட்டங்களிலும் சில மண்டபக்காரர்கள் பழவகைகளை அல்லது மரக்கறி வகையினை வெட்டி மேசை அலங்காரம் செய்து வைக்கின்றனர். இக் காய்கனி அழகு படுத்தும் கலையில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது பாவனைக்கு உபயோகப் படுத்தும் கத்தி. இக் கத்தி மிகவும்
பெரியதாக இருப்பின் பாவிப்பது கடினம். கைக்கு அடக்கமானதாக இருப்பின் பாவனை சுலபமாக இருக்கும். இப்படத்தில் காட்டப்பட்டிருக்கும் கத்திகள் பாவனைக்கு உகந்தவை.



எவ்வாறு இந்த வாத்தினை வெள்ளரிப் பழத்தில் வெட்டலாம் எனப் பார்ப்போம். இவ்வாறு வெட்டுவதற்கு முதலில் பழம் ஆகக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு அறை வெப்ப நிலையில் இருக்க வேண்டும். குளிர் சாதனப் பெட்டியில் இருக்கும் பழங்கள் விறைப்பாக இருப்பதால் வெட்டும் போது சுலபமாக உடைந்து விடும்.

முதலில் பழத்தின் அடியில் ஒரு சிறுதுண்டினை வெட்டி எடுக்க வேண்டும். அவ்வாறு வெட்டி எடுப்பதன் மூலம் பழம் ஆடாமல் மேசைமீது இருப்பதற்கு வசதியாக இருக்கும். அடுத்து ஒரு கத்தி அல்லது முள்ளுக் கரண்டியின் முள்ளினால் பழத்தில் வாத்தின் உருவத்தை வரைய வேண்டும். அதன் பின் மிகவும் கூரான கத்தியினால் வரையப்பட்ட இடத்தில் ஆழமாக வெட்டி எடுக்க வேண்டும். இவ்வாறு வெட்டி எடுத்தபின்னர் பழத்தின் உள்பகுதியிலுள்ள சதைப்பற்றான பகுதியை கரண்டி கொண்டு சுரண்டி வெளியே எடுத்து விட வேண்டும். கண்களுக்கு கராம்பு ஒன்று எடுத்து பொருத்திவிட்டால் அழகான ஒரு வாத்து கிடைத்துவிடும். இவ்வாத்தினுள் நீங்கள் செய்து வைத்திருக்கும் பழக்கலவையினை போட்டு நிரப்பி வைத்தால் அழகாக இருக்கும்.

தேவையான பொருட்கள்: அவித்த முட்டை, சிவப்பு முள்ளங்கிக் கிழங்கு அவித்த முட்டையினை நீளப்பாடாக இரண்டாக வெட்டி அதன் தட்டையான பக்கம் நிலத்தில் இருக்கும் படி வைத்து கூர் கூடிய பக்கத்தில் ஒரு சிறு பிளவை வைக்க வேண்டும். பின்னர் முள்ளங்கியில் மெல்லிய துண்டினை வெட்டி அதனை முட்டையில் இருக்கும் பிளவினுட் செருகி கராம்பினால் இரண்டு கண்களை வைத்துவிட்டால் அழகான முயல் குட்டி கிடைக்கும்.



HERITAGE
Education Funds
**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘அன்னை அழைக்கிறாள்’

# 150 மணித்தியால தொடர் உண்ணாநோன்பு




யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

**The Law Offices of**

**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

Real Estate Law
Residential &
Commercial
Business Law

**Tel: 416 265 3456** **Fax: 416 265–2770**

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்* 27
எஸ். பத்மநாதனின் தொடர்

# சிட்டுக்களே வாருங்கள்!

ஆற்றலும் திறமையும் கொண்டு எந்த வேலையிலும் சுதந்திரமாக செயற்படும் உங்களது வளர்ச்சியில் எப்போதும் அக்கறை கொண்டுள்ள மாமாவுக்கு வயது அறுபத்தைந்தாகிறது. எனினும், அவரது உள்ளம் மட்டும் உங்களுடன் குதூகலிப்பதில், விளையாடுவதில் குறைந்த வயது தான். அவர் உங்கள் ஒளிவீசும் கண்களுக்குள் புதைந்து கிடக்கிறார், உங்கள் அளவுக்கு மீறிய ஆற்றலில் அமிழ்ந்து கிடக்கிறார். சிட்டுக் குருவியாக பறப்பதில் உங்களுக்குள்ள குதூகலிப்பில் களித்துக் கிடக்கிறார்.

அறிவுள்ள சிட்டுக்களே! உங்கள் அறிவின் வளர்ச்சியில் உதவுவதற்கு எத்தனையோ வளங்கள் உங்களைச் சுற்றியுள்ளன; செல்லும் இடமெல்லாம் பரந்து கிடக்கின்றன. அவற்றினை முறையாகப் பயன்படுத்துவீர்களானால் எல்லோரையும் விஞ்சி நிற்பீர்கள்! அப்படி என்ன வளம்? என்று திகைப்படைவீர்கள்! மாமா குறிப்பிடுவது சிறிய துண்டுப் பிரசுரங்கள் (Flyers) எனப்படும் சிறிய துண்டு வடிவிலான அறிக்கைகளைத் தான். இதனை Booklet, Leaflet, Pamphlet என்று பல சொற்களில் குறிப்பிடுகிறார்கள். விமானத்தில் பறப்பதற்கு (Fly) எல்லோருக்கும் நல்ல விருப்பம். ஆனால், இந்த Flyers இனைப் படிப்பதற்கு மனம் வருவதில்லை. மாமாவின் அறிவினை மிகவும் உயர்த்துவதற்கு உதவி வந்தவை இந்த பிரசுரங்கள் தான். நீங்களும் இன்றே இதனைப் பொறுமையாக இருந்து படிக்க ஆரம்பியுங்கள். உங்களை அறியாமல் அறிவு மேம்படும்.

சிட்டுக்களே! நீங்கள் தினசரி பல இடங்களுக்குச் செல்கின்றீர்கள். அங்கு வரவேற்பறையில் சிறிய இந்த பிரசுரங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதனை பார்ப்பீர்கள். குறிப்பாக வைத்தியசாலைகள், பல்வேறு திணைக்களங்கள், விமான நிலையங்கள், நூதன காட்சிச் சாலைகள் போன்றவற்றில் அதிகமான அழகான இந்த பிரசுர படிவங்கள் காணப்படும். இவற்றினைத் தொடுபவர்கள், வாசிப்பவர்கள் மிகவும் குறைவு. இந்தச் சிறிய பிரசுர படிவங்கள் (Thin paper coverd booklets) மிகவும் நுட்பமாக அமைந்திருக்கும். கவர்ச்சியான தலைப்புகள், இலகுவான உபதலைப்புகள், படங்கள், சுருக்கமான வார்த்தைகள், தெளிவான அச்சுப் பதிவுகள், குறுகிய நேரத்தில் வாசிக்க முடிபவை போன்ற அம்சங்கள் காணப்படும்.

எந்தப் பெரிய நிறுவனமும் தங்கியிருப்பது இந்த சிறிய துண்டுப் பிரசுரங்களின் திறமையில் தான். இதனைச் சிறந்த நிபுணர் குழு மிகவும் கவனமாக தயாரிக்கின்றனர். ஆனால் நாம் இதனைப் படிப்பது குறைவு. எனினும், சிட்டுக்களாகிய உங்களுக்கு எல்லா விடயங்களையும் இலவசமாக போதிக்கும் இந்த துண்டுப் பிரசுரங்கள் அல்லது வெளியீடுகள் நிறைந்த பயனை தர முடிகின்றது.

சிட்டுக்களே! உங்களை உயர்த்திக் கொள்ள, புதுமையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள பகுத்தறிவுச் சிந்தனையை ஊட்டக் கூடிய இந்த சிறிய பிரசுர படிவங்களைத் தேடிப் பெற்று சேகரித்து படியுங்கள். புதிய புதிய படிவங்களை பார்த்து அனுபவியுங்கள். இதன் பலனை பின்பு நிறையவே உணர்ந்து கொள்வீர்கள். பெரிய நூல்களை விட இன்று இந்த சிறிய பிரசுரங்களின் சாதனைகளே அதிகமாகின்றன. சிட்டுக்களே நீங்களும் இதனை அறிந்த செயற்படுங்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**
7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Dr. Shan - Tuesday (morning)
Dr. Yao San (Tue, Fri & Sat
Dr. Brian (monday)
Dr. May (wednesday)

**(416) 690 0121**





**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement
JOB OPPORTUNITIES
- Child Care Assistant
- Child Care Worker
- Day Care Worker / Teacher
- Preschool Worker
- Infant Day Care Worker

**COMPUTERIZED ACCOUNTING**
JOB OPPORTUNITIES
- Accounting Assistant
- Accounts Manager
- Accounts payable clerk
- Accounts Receivable Clerk
- Payroll clerk

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement
JOB OPPORTUNITIES
- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Resident Care Aid
- Nursing Assistant

**MEDICAL OFFICE ADMIN (MOA)**
JOB OPPORTUNITIES
- Medical Office Assistant
- Medical Admin. Asst.
- Medical Receptionist
- Medical Secretary
- Hospital Ward / Unit Clerk

**BUSINESS ADMINISTRATION**
JOB OPPORTUNITIES
- Administrative Assistant
- Office Assistant
- Office Administrator
- Management Trainee
- Executive Assistant

**NETWORK ENGINEERING**
JOB OPPORTUNITIES
- Network Administrators
- Systems Administrators
- Technical Support Specialists
- Helpdesk Support
- LAN Administrators

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
We welcome:
- ☐ Social Assistance receipients
- ☐ EI - currently receiving / received receipients
- ☐ Maternity benefits received receipients

# Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
Tel : 426.285.9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் அஸ்பிரின் சர்வரோக நிவாரணியின் மறுபிறப்பு

டாக்டர். எம்.கே. முருகானந்தன்
குடும்ப மருத்துவர்

காய்ச்சலா, தலையிடியா, உடல் உழைவா, மூட்டு வலியா எதுவானாலும் அஸ்பிரின் மருந்துதான். இவ்வாறு அது கைகொடுத்த காலம் ஒன்று இருந்தது.

ஆம் சர்வரோக நிவாரணி போலப் பயன்பட்டது. ஆனால் வலியைக் குறைக்கவும், காய்ச்சலைத் தணிக்கவும் வீரியம் கூடியதும், பக்க விளைவுகள் குறைந்ததுமான புதிய மருந்துகள் வந்ததும் அதன் பிரபல்யம் மங்கத் தொடங்கியது.

ஆனால் அதற்கு சென்ற சில ஆண்டுகளாக மீண்டும் மவுசு கூடிவிட்டது. மறுபிறப்பு எடுத்துவிட்டது.

ஆம்! 'தினமும் அஸ்பிரின் சாப்பிட்டு வாருங்கள்' என வைத்தியர்கள் சிபார்சு செய்பவர்கள் தொகை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

### யாருக்கு இது தேவை?

மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்தான நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியத்தைக் குறைக்கும் ஆற்றல் இருப்பதால்தான் மருத்துவர்களால் அதிகம் எழுதப்படும் மருந்தாக அஸ்பிரின் மாறிவிட்டது.

ஒருவருக்கு மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்கனவே வந்திருந்தால் அது மீண்டும் வராமல் தடுப்பதற்கு தினமும் அஸ்பிரின் எடுக்க வேண்டியதாக உள்ளது. அது மட்டுமல்லாமல் பக்கவாதம் அல்லது மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளவர்களுக்கும் தேவைப்படுகிறது.

### இவை வருவதற்கான சாத்தியம் அதிகமுள்ளவர்கள் யார்?

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், குருதியில் கொலஸ்டரோல் அதிகமுள்ளவர்கள் ஆகியோருக்கு அதற்கான சாத்தியம் மிக மிக அதிகமாகும்.

புகைப்பவர்கள், தினமும் அதிகமாக மது அருந்துபவர்கள்இ அதீத எடையுள்ளவர்கள், உடலுழைப்பு உடற் பயிற்சி அற்றவர்கள், பரம்பரையில் மாரடைப்பு, பக்கவாதம் உள்ளவர்கள் ஆகியோருக்கும் சாத்தியம் அதிகமாகும்.

### அஸ்பிரின் எவ்வாறு உதவுகிறது?

அஸ்பிரின் மருந்தானது குருதியின் உறைதல் (Clotting) தன்மையைக் குறைக்கிறது. உதாரணமாக ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது என வைத்துக் கொள்வோம். உடனடியாக இரத்தம் கசியும் இடத்திற்கு வெண்குருதி சிறுதுணிக்கைகள் (Platelets) வந்து குவியும். இவை திரண்டு, இரத்தத்தை கட்டிப்படுத்தி, கசிந்து கொண்டிருக்கும் இரத்தக் குழாய்களின் வாயிலை அடைத்து மேலும் இரத்தம் வெளியேறுவதைத் தடுக்கும். ஆனால் இவ்வாறு குருதி உறைந்து கட்டிபடுதல் இரத்தக் குழாய்களுள்ளும் ஏற்படலாம். முக்கியமாக மூளைக்கும், இருதயத்திற்கும் குருதியைக் கொண்டு செல்லும் இரத்தக் குழாய்களுள் ஏற்பட்டால் அது ஆபத்தானது. கொலஸ்டரோல் காரணமாக அவை இரத்தக் குழாய்க்குள் படிந்து அவற்றின் இரத்தம் பாயும் பாதையை ஏற்கனவே ஒடுங்கச் செய்திருந்தால், அங்கு குருதி உறைந்து கட்டிபட்டு இரத்த ஓட்டத்தை தடைப்படுத்தும்.

அவ்வாறு அடைபடும் போதுதான் மாரடைப்பு, பக்கவாதம் ஆகியன ஏற்படுகின்றன. அஸ்பிரின் மருந்தானது அவ்வாறு இரத்தம் உறைந்து மாரடைப்பு, பக்கவாதம் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கின்றன.

### எவ்வளவு அஸ்பிரின் தேவை?

வழமையான அஸ்பிரின் மாத்திரைகள் 300 மிகி (300 milligrams (mg) அளவுடையவை. ஆனால் மாரடைப்பு பக்கவாதம் ஆகியவற்றைத் தடுப்பதற்கான மாத்திரைகள் 75 மிகி முதல் 100 மிகி வரையானவை மட்டுமே. இது அந்தத் தேவைக்கு போதுமானதாகும்.

### இவற்றிலும் வெவ்வேறு வகைகள் உள்ளன.

இரைப்பையில் கரையாது அப்பால் சென்று உணவுக் குழாயில் கரைவதை Enteric-coated aspirin என்பார்கள். இது முக்கியமாக இரைப்பை புண் உள்ளவரக்ளுக்காகும். இரைப்பையை உறுத்தாது அப்பால் சென்று கரைய வைப்பதன் மூலம் பாதுகாப்பு அளிக்கிறது. ஆயினும் இது சமிபாடடைந்து செயற்படுவதற்கு கூடிய நேரம் எடுக்கிறது. அத்துடன் இரைப்பையை உறுத்தாது என்ற போதும் இரைப்பை புண்ணிலிருந்து இரத்தம் கசிவதைக் குறைக்குமா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

வேறு சில வாயில் வைத்துக் கரையவிடக் கூடியனவாக இருக்கின்றன. இவை விரைவில் உறிஞ்சப்பட்டு விடும்.

### சத்திர சிகிச்சைகளும்இ நிறுத்துவதும்

இவற்றைத் தினமும் உட்கொள்வது அவசியமாகும். தொடர்ந்து உபயோகிப்பவர்கள் இதனைத் திடீரென நிறுத்துவது கூடாது. திடீரென நிறுத்தினால் அது எதிர்விளைவை ஏற்படுத்தி, பக்கவாதம் மாரடைப்பு வருவதற்கான சாத்தியத்தை அதிகரிக்கக் கூடும் என சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வேறு நோய்களுக்காக சத்திரசிகிச்சைக்கு செல்ல வேண்டி நேர்ந்தால் இதனை ஒரு வாரத்திற்கு முன் நிறுத்த வேண்டியிருக்கும். நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனை பெறுங்கள். பாரிய சத்திரசிகிச்சைகளுக்கு மாத்திரமின்றி பல் பிடுங்குவது போன்ற சாதாரண சத்திர சிகிச்சையாக இருந்தாலும் நீங்கள் தினம் அஸ்பிரின் எடுப்பதை மருத்துவரிடம் முற்கூட்டியே சொல்ல மறக்க வேண்டாம்.

### பக்கவிளைவுகள் ஏதும் ஏற்படாதா?

தினமும் அஸ்பிரின் சாப்பிடுவதால் பக்கவிளைவுகள் ஏதும் ஏற்படாதா? எல்லோருக்கும் இது உகந்ததா? பெரும்பாலானவர்களுக்கு இதனை உட்கொள்வதில் எத்தகைய பிரச்சனைகளும் ஏற்படாது. ஆயினும் கீழ் கண்டவர்கள் விடயத்தில் அவதானம் தேவை.

அஸ்பிரின் மருந்திற்கு ஒவ்வாமை (Allergy) உள்ளவர்கள் அதனை எடுக்கக் கூடாது. குடற்புண் உள்ளவர்கள் அதிலும் முக்கியமாக அதிலிருந்து இரத்தக் கசிவு ஏற்பட்டவர்கள் எடுக்கக் கூடாது. பக்க வாதத்தில் இரண்டு வகை உண்டு. முன்னர் கூறியவாறு குருதி உறைதலால் ஏற்படுபவர்களுக்கு இது நல்லது. மாறாக குருதிப் பெருக்கால் பக்கவாதம் ஏற்படுபவர்களுக்கு இது நோயைக் கூட்டக் கூடும். இதனை சி.டி ஸ்கான் போன்ற பரிசோதனைகளாலேயே கண்டு கொள்ள முடியும்.

அத்துடன் குருதி உறைதல் குறைபாடு நோயுள்ளவர்களும் உபயோகிக்கக் கூடாது. அஸ்பிரின் மாத்திரைகளை உட்கொள்பவர்கள் மதுபானம் அருந்துவதை மிகவும் குறைக்க வேண்டும். ஏனெனில் இரண்டும் சேரும்போது மருந்தின் செயற்பாட்டு வீச்சு அதிகரிப்பதுடன் இரைப்பைக்கும் கூடிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

### மாரடைப்பின்போது

ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட்டதற்கான அறிகுறிகள் திடீரென தோன்றினால் ஒரு சாதாரண அஸ்பிரினை உடனடியாக மென்று விழுங்க வேண்டும் என மருத்துவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய தமிழ்ப் பட்டதாரிகள் சமூகம் ரொறன்ரோ - டன்டாஸ் சதுக்கத்தில் நடத்திய

# 24 மணி நேர கவனயீர்ப்பு










நிகழ்வின் பதிவு














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 21

## சோழர் கால தமிழ் இலக்கிய கல்வி வளர்ச்சி

பிற்காலச் சோழ பாண்டிய மன்னர்கள் ஆட்சியில் வடமொழிக் கல்விக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட்டதைப் பார்த்தோம். வேத பாடசாலைகளுக்கு மானயம் வழங்கப்பட்டது. இருந்தும் கிபி 10 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ் நாட்டில் பேரரசாகத் தோற்றம் பெற்ற சோழர் ஆட்சி தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்ந்தது. தமிழ்மொழி கற்றறிந்த மன்னர்களும் இருந்தனர்.

சங்க காலத்தில் அகப்பாடல்களும் புறப்பாடல்களும் இயற்றப்பட்டன. சங்கம் மருவிய காலத்தில் காப்பியங்கள் மலர்ந்தன. அதனைத் தொடர்ந்து நீதி நூல்கள் தோற்றம் பெற்றன. பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியம் தளைத்தோங்கியது. முதலாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் நாயன்மார்கள் பாடிய தேவார திருவாசகங்கள் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டன.

**இன்று மேன்மைகொள் சைவ நீதி தளைக்க உருவாக்கப்பட்ட சைவ ஆதீனங்கள் சில தேவார திருவாசகங்கள் ஓதப்படுவதை எதிர்க்கின்றன. கோயில் குடமுழுக்கு விழாக்களில் தேவாரம் திருவாசகம் பாடுவதற்கு தருமபுரம், திருப்பனந்தாள் ஆதீனங்கள் உயர்நீதிமன்றம் சென்று வழக்காடி தடை வாங்கியிருப்பதை இங்கே பதிவு செய்தே ஆக வேண்டும். இது தமிழ்மொழி பயன்பாட்டுக்கு தமிழர்களே கோடரிக்காம்பாகச் செயல்படுவதைக் காட்டுகிறது.**

இந்த இடத்தில் தமிழ்மொழி வளர்ச்சி பற்றிச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கலாம் என நினைக்கிறேன். தமிழர் ஆட்சி, தமிழ்மொழி வளர்ச்சி தமிழ் இலக்கிய வளர்ச்சி ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து செல்பவை. தமிழ் மக்களை தமிழ் மன்னர்கள் ஆண்டபோது தமிழ் மொழி வளர்ச்சி கண்டது. தமிழ் மொழி வளர்ச்சி கண்டபோது தமிழ் இலக்கியம் வளர்ச்சி கண்டது. அப்படி இல்லாத போது அதற்கு எதிர்மாறான விளைவுகள் ஏற்பட்டன.

தமிழ் இலக்கிய வளர்ச்சியை வரலாற்றுக் கண்ணோடு பார்க்கும் ஆசிரியர்கள் அதனைக் கால வாரியாகவும் பொருள் வாரியாகவும் அல்லது இரண்டையும் இணைத்து வரையறை செய்வது வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கால அடிப்படையில் பழங்காலம், இடைக் காலம், பிற்காலம், இக்காலம் எனப் பகுப்பர். அல்லது சங்க காலம், சங்கம் மருவிய காலம், களப்பிரர் காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், அய்ரோப்பியர் காலம், இக்காலம் எனவும் பகுப்பர். சிலபோது பொருள் அடிப்படையில் சங்க இலக்கிய காலம், நீதி இலக்கிய காலம், பக்தி காலம், உரையாசிரியர் காலம், சமய சாத்திரகாலம், சிற்றிலக்கிய காலம் எனப் பகுப்போரும் உண்டு.

தமிழறிஞர் மு.வரதராசன் தாம் எழுதிய **தமிழ் இலக்கிய வரலாறு** என்ற ஆய்வு நூலில் தமிழ்இலக்கிய வளர்ச்சியை காலவாரியாகவும் பொருள்வாரியாகவும் பின்வருமாறு வகுத்துள்ளார்.

**பழங்காலம்**

சங்க இலக்கியம் - கிமு 500 முதல் கிபி 250 வரை அகம் புறம் பற்றிய பாடல்கள்.

நீதி இலக்கியம் - கிபி 150 முதல் கிபி 500 வரை.
திருக்குறள் முதலிய நீதி நூல்கள். கார் நாற்பது போன்ற வெண்பா நூல்கள்.

பழைய காப்பியங்கள்-சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொளாயிரம் முதலியன.

**இடைக்காலம்**

**பக்தி இலக்கியம்** - கிபி 600 முதல் கிபி 900 வரை.
நாயன்மார் ஆழ்வார் பாடல்கள். கலம்பகம் போன்ற பலவகை நூல்கள்.

காப்பிய இலக்கியம்- கிபி 900 முதல் 1500 வரை
சீவக சிந்தாமணி, பெருங்கதை முதலிய சமண பவுத்த நூல்கள்.
இறையனார் களவியல் முதலிய இலக்கண நூல்கள்.
சேக்கிழார், கம்பர், ஒட்டக் கூத்தர், அவ்வையார் முதலியவர்கள் இயற்றிய நூல்கள். உலா, பரணி, பிள்ளைத் தமிழ்.

உரை நூல்கள் - கிபி 1200 முதல் 1500 வரையில்
இளம்பூரணர், பேராசிரியர் முதலானவர்கள்.
வைணவ விளக்க நூல்கள், சைவ சித்தாந்த சாத்திர நூல்கள்.
சிறு நூல்கள். தனிப்பாடல்கள்.

புராண இலக்கியம் - கிபி 1500 முதல் கிபி 1800 வரை.
புராணங்கள், தலபுராணங்கள். இஸ்லாமிய இலக்கியம். கிறித்துவ தொண்டு, வீரமாமுனிவர் முதலானவர்கள். உரைநடை வளர்ச்சி.

**இக்காலம்**


பத்தொன்பதாம் நூற்றாண்டு
கிறித்தவ இலக்கியம். இராமலிங்கம் வேதநாயகர் முதலானவர்கள்.
நாவல் வளர்ச்சி, கட்டுரை வளர்ச்சி.

இருபதாம் நூற்றாண்டு
பாரதி, பாரதிதாசன், கல்கி, புதுமைப்பித்தன்.
சிறுகதை, நாவல், நாடகம். வாழ்க்கை வரலாறு, கட்டுரை, ஆராய்ச்சி முதலானவை.

சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி என்ற அய்ம்பெருங்காப்பியங்கள். முதல் இரண்டு காப்பியங்களும் சங்கம் மருவிய காலத்தவை. எஞ்சியவை சோழர் காலத்தவை. சமண காப்பியமான வளையாபதி இன்று கிடைக்கவில்லை.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதன் ஆசிரியர் யார் என்பதும் தெரியவில்லை. இந்த நூலில் உள்ள பாடல்களை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டி எழுதியுள்ளார்கள். அந்த விதத்தில் 72 பாடல்கள் கிடைத்துள்ளன.

உ.வே. சாமிநாதையர் எழுதிய **என் சரித்திரம்** என்ற நூலில் வளையாபதியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்த நூலை திருவாவடுதுறை மடத்து நூலகத்தில் வளையாபதி ஏட்டுச் சுவடியை தாம் பார்த்ததாகவும் அந்தக் காலத்தில் அத்தகைய பழைய நூல்களில் தனக்குப் பற்று உண்டாகவில்லை என்றும் பிற்காலத்தில் பழைய நூல்களை ஆராய வேண்டுமென்ற மனநிலை உண்டான பிறகு அதனைத் தேடிப் பார்த்தபோது அந்தச் சுவடி மடத்து நூலகத்தில் காணப்படவில்லை என எழுதியுள்ளார். நல்லூர் ஆறுமுக நாவலர் தான் பதிக்க இருந்த நூல்பட்டியலில் வளையாபதி காப்பியத்தையும் சேர்த்திருந்தார். வளையாபதி காணாமல் போனதற்கு அதீத சைவ சமயப்பற்றே காரணமாகும். சைவம் தலையெடுத்த போது சமண, பவுத்த இலக்கியங்கள் நீருக்கும் நெருப்புக்கும் இரையாகின.

குண்டலகேசியை இயற்றியவர் பெயர் நாதகுத்தனார். குண்டலகேசி ஒரு பவுத்த காப்பியம். சீவகசிந்தாமணியைத் திருத்தக்க தேவர் என்ற சமண முனிவர் எழுதினார். சீவகன் எட்டுப் பெண்களைத் திருமணம் புரிந்த வரலாற்றைக்கூறி அவன் வீடுபேறு அடைந்த கதையைக் கூறுகிறது. அய்ம்பெரும் காப்பியங்கள் போல் தமிழில் அய்ஞ்சிறு காப்பியங்கள் உண்டு. உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி போன்ற சமண, பவுத்த காப்பியங்கள் குறிப்பிடத்தக்கவை. தோளாமொழித்தேவர் 2331 பாடல்களைக் கொண்ட சூளாமணியை இயற்றினார். மேருமந்திர புராணத்தை வாமனாச்சாரியார் இயற்றினார்.

பிற்காலச் சோழர் காலத்தில் (10 – 13 ஆம் நூற்றாண்டு) பல இலக்கண நூல்கள் இயற்றப்பட்டன. சமண துறவியான அமுதசாகரர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவிருத்தி, நாற்கவிராசநம்பி இயற்றிய நம்பியகப் பொருள், குணவீரபண்டிதரின் நேமிநாதம் மற்றும் வச்சணந்தி மாலை, அய்யாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை புத்தமித்திரரின் வீரசோழியம், வடமொழித்தண்டியின் தண்டியலங்காரம் பவணந்தி முனிவரின் நன்னூல் ஆகியன இயற்றப்பட்டன. இந்நூல்களுக்கு பெரும்பாலும் தொல்காப்பியமே முதல் நூலாக விளங்கியது. (வளரும்)

---

# வேண்டுகோள்

நமது தாயகத்தின் கல்விப் பாரம்பரியம் மகத்தானது. அதற்குக் காரணமாக அமைந்தவர்கள் சென்ற நூற்றாண்டிலே எமது பாடசாலைகளுக்காக அர்ப்பணிப்புடன் தன்னலம் கருதாமல் உழைத்த பாடசாலை அதிபர்கள் பலர். அவர்களில் ஒரு சிலரைப் பற்றித் தொடர்ந்து எழுதவேண்டும் என விரும்புகிறேன். ஆனால், இந்தப் புனித கைங்கரியத்தினை நிறைவேற்ற நான் ஒருவன் நினைத்தால் மட்டும் சாத்தியமில்லை. அவர்கள் பற்றிய தகவல் முழுமையானதாக அமைவதற்கு உங்களுடைய உதவியை நாடுகிறேன். அத்தகைய பெருமைக்குரிய அதிபர்களுடன் உறவு, நேரடித் தொடர்பு, கற்ற அதிர்ஷ்டம், அவர்கள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டவை, அறிந்தவை, புகைப்படங்கள் என உங்கள் பலரிடம் திரட்ட வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. உங்களால் எனக்கு உதவு முடியும். உதவினீர்கள் என்றால் பெரிதும் நன்றி உடையவனாக இருப்பேன். அவர்களில் ஒரு சிலரின் பெயர்களைக் கீழே தந்துள்ளேன். இன்னும் பலர் உள்ளனர்.

<u>அவர்களில் சிலர்:</u>

| | | |
|---|---|---|
| அருட் தந்தை லோங் அடிகளார் | - | சம்பத்திரியாசிரியர் கல்லூரி |
| கண்டி எஸ். பேரின்பநாயகம் | - | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| சி. கே . கந்தசாமி | - | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| ஒறேற்றர் சுப்பிரமணியம் | - | ஸ்கந்தவரோதயா கல்லூரி |
| ரி.ரி. ஜெயரத்தினம் | - | மகாஜனக் கல்லூரி |
| சைவப்பெரியார் சிவப்பிரகாசம் | - | விக்ரோறியாக் கல்லூரி |
| ஐ. பி. துரைரத்தினம் | - | யூனியன் கல்லூரி |
| ஏ.ஈ. தம்பர் | - | யாழ் மத்திய கல்லூரி |
| வணக்கத்துக்குரிய பிக்னெல் | - | யாழ்ப்பாணக் கல்லூரி |
| சி. குமாரசாமி | - | யாழ் இந்துக் கல்லூரி |
| எஸ். குமாரசாமி | - | புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி |
| எஸ். அம்பிகைபாகன் | - | வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி |
| எ.நவரட்ணசிங்கம் | - | நெடுந்தீவு மகா வித்தியாலயம் |
| பூரணம்பிள்ளை | - | ஹார்ட்லிக் கல்லூரி |
| வீரசிங்கம் | - | புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி |
| வி. தம்பு | - | வேலணை மத்திய மகாவித்தியாலயம் |

நன்றி.
பொ. கனகசபாபதி

225 John Tabor Trail, Scarborough. ON. M1B 2R5
Telephone: (416) 283 -1544


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி
எழுதும்

29

# வெள்ளிப் பணம் - டாலர்

வெள்ளிப்பணத் தொடரில் உலக பொருளாதார சுருக்கம் (Recession) கனடாவையும் பல்வேறு வகையிலும் பாதித்து இன்று சாதாரண மக்களின் சமையல் அறைவரை வந்திருக்கின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.

பொருளாதார செழிப்புக் காலத்தில் (Economy Boom) குடும்ப வரவு செலவுத் திட்டத்தினை சரியாக நடைமுறைப்படுத்தாமல் இருந்தவர்களுக்கு தற்பொழுதுள்ள காலம் மிகவும் சோதனைக் காலமாக இருக்கலாம். ஆனால் எப்பொழுகும் குடும்ப வரவு-செலவுத் திட்டத்தினை (Family budget) மேற்கொண்டு வருபவர்கள் இத்தகைய காலத்தில் எல்லாறு தற்பொழுதுள்ள பொருளாதார நெருக்கடியினைச் சமாளிப்பது என்பதை அனுபவரீதியாக கண்டறிந்திருப்பார்கள். இந்தப் பொருளாதார மந்த காலத்தில் சிலர் வேலைகளை இழந்திருப்பார்கள். சிலருக்கு வேலையில் மணி நேரம் குறைக்கப்பட்டிருக்கும். இன்னும் சில இடங்களில் சம்பள உயர்வு இல்லாமல் அல்லது குறைக்கப்பட்டும் செய்யவேண்டிய வேலை அதிகமாகவும் உள்ளது. இப்படியான நடைமுறையால் குடும்ப வருமானத்தில் குறைவு ஏற்படுகின்ற போது குடும்பச் செலவினமும் குறைக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இப்படியான காலகட்டத்தில் எப்படியான நடைமுறையினை மேற்கொள்ளலாம் என்பதை நோக்குவோம்.


முதலாவதாக, இருக்கின்ற வேலையைத் தக்கவைத்துக் கொள்ளுதல் அவசிமாகின்றது. இதில் கவனம் எடுக்க வேண்டிய விடயமாக இருப்பது செய்யும் தொழிலில் தவறுகள் (mistake) ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுதல், வேலைக்கு ஒழுங்காகவும் நேரத்துக்கு சமுகமளித்தல் சக தொழிலாளர்களுடன் (co-workers) முரண்பாடுகளை ஏற்படுத்தாமல் இருப்பது போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் தொழில் நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு வருகின்றபோது உங்கள் பெயர் முதலாவதாக இருக்க வேண்டிய நிலைக்கு வரலாம்.

மறுபுறத்தில் வருமானத்துக்கு எற்ப செலவுகளை கட்டுப்படுத்தல் அவசியமாகின்றது. இதில் முதலாவதாக கருத்தில் கொள்ள வேண்டியது குடும்ப வரவு-செலவுத் திட்டத்தினைக் கொள்ளுதல். இதன் தொடர்ச்சியாக பொருட்களை மலிவான விலையில் கொள்வனவு செய்தல் கவனத்தில் கொள்ளல் வேண்டும். உதாரணமாக சமையலுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் வெவ்வேறுபட்ட கடைகளில் வாராவாரம் குறைந்த விலைகளில் விற்பதாக பத்திரிகைகள் மூலமும் மற்றும் வானொலி தொலைக்காட்சி மூலமும் விளம்பரம் செய்வதைப் பார்க்கின்றோம். இந்தத் தகவலை பயன்படுத்தி உங்களுக்குத் தேவையான பொருட்கள் விலை குறைவாக இருந்தால் சென்று வாங்க முடியும். இதேவேளை இந்த நிறுவனம் உங்கள் வீட்டிலிருந்து பல மைல்கள் தூரம் இருக்குமாயின் உங்கள் போக்குவரத்துக்கான பணச் செலவு, நேரச் செலவு என்பனவற்றை கருத்தில் எடுத்துக் கொள்ளுதல் அவசியம். சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற் பணம் என்கின்ற முது மொழிபோல் அமையக்கூடாது.

இதுமாத்திரமன்றி உங்களின் தேவைகளை இரண்டாக வகுத்துக் கொள்ளுங்கள். முதலாவதாக அடிப்படைத்தேவை அல்லது அத்தியாவசிய தேவை. இரண்டாவதாக அத்தியாவசியமற்ற தேவை அல்லது ஆடம்பரத் தேவை. இதனைச் சரியாக பகுத்து அறிந்து கொள்வதில் கூட சிலருக்கு சிக்கல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்தப் பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் பல நிறுவனங்கள் தமது செயற்பாடு-களை முடிவுக்கு கொண்டுவரும் நிலையில் இறுதி விற்பனையாக எமக்குத் தேவையில்லாத ஒரு 100 டாலர் பெறுமதியான பொருளை 25 டாலருக்கு விற்றால் அதனை வாங்கவேண்டும் போல் மனம் அங்கலாய்க்கும். ஆனால், பணத்தினைப் பகுத்தறிவின் துணை கொண்டு சிக்கனமாகச் செலவிடும் மனிதன் இப்படியான செயற்பாட்டினை செய்ய மாட்டான். உங்கள் வீட்டுக்கடன் (mortgage), கடன் அட்டைக் கடன் போன்றவகைகளில் மாதாந்த குறைந்தளவு கட்டணத்தினையாவது தாமதம் இல்லாமல் செலுத்தி வருவதன் மூலம். உங்கள் கடன் பெறும் தகுதியினை (Credit rate) நல்ல முறையில் வைத்து இருப்பது ஒரு சவால் நிறைந்த பணியாக இருக்கும்.

இங்கு கூறப்பட்ட விடயங்கள் காலத்தின் தேவைகருதி எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் கருத்தாக இருந்தாலும், இன்னும் பல நடைமுறைகள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வருமானச் சூழலுக்கு ஏற்ப மாறுபட்டு அமையும் என்பதையும் வாசகர்கள் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.



**Jude**
**Anthonypillai LL.B. (Canada)**
Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
**416 332 8547**
**தொலைநகல்**
**416 332 8379**

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







**தொடர்புகளுக்கு:**

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NLR ACCOUNTING AND TAX SOLUTIONS**

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

ஆலோசனை கூறுகிறார்கள். அல்லது மேற் கூறிய குறைந்த வலுவுள்ள அஸ்பிரினில் நான்கு உடனடியாக எடுக்க வேண்டும்.

தினமும் அஸ்பிரின் மாத்திரை எடுப்பவர்களுக்கும் இது பொருந்தும். மென்று விழுங்கும் போது அஸ்பிரின் விரைவில் குடலிலிருந்து உறிஞ்சப்பட்டு உடனடியாகச் செயற்படும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

ஆயினும் பக்கவாதம் ஏற்பட்டால் மாரடைப்பிற்கு எடுப்பதுபோல உடனடியாக அஸ்பிரின் எடுக்கக் கூடாது.

ஏனெனில் எல்லாப் பக்கவாதங்களும் குருதி கட்டிபடுவதால் ஏற்படுவதில்லை. சில சிறுஇரத்தக் குழாய்கள் வெடிப்பதால் ஏற்படுகின்றன. அவ்வாறானவற்றுக்கு அஸ்பிரின் கொடுத்தால் குருதி கசிவது அதிகமாகி நோய் தீவிரமடையும்.

புதிய மருந்து

இப்பொழுது குருதி உறைதலைக் குறைக்கும் அஸ்பிரின் மருந்திற்கு பதிலாக புதிய வகை மருந்தான குளபிடோகிறில் (clopidogrel) பாவனைக்கு வந்துள்ளது. இது சற்று அதிக விலையானது. அஸ்பிரின் மருந்தால் பக்கவிளைவு ஏற்படுபவர்களுக்கு ஏற்றது. அத்துடன் பல தருணங்களில் அஸ்பிரினுடன் சேர்த்தும் மருத்துவர்கள் கொடுக்கிறார்கள்.

மருத்தவ விஞ்ஞானம் அதீத வளர்ச்சி கண்டுள்ள இன்றைய கால கட்டத்திலும் அஸ்பிரினின் உயிர் காக்கும் ஔடதமாகக் கைகொடுப்பதுடன், எளிதாகக் கிடைப்பதும், எல்லோருக்கும் கிட்டக் கூடிய விலை குறைந்த மருந்தாக இருப்பதும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய விடயம் என்பதில் சந்தேகம் இல்லை.

## மருத்துவ ஹொட்லைன்

ஒன்ராறியோவில் வதியும் 500,000 இற்கும் அதிகமான, குடும்ப மருத்துவரில்லாதவர்களுக்கு மருத்துவ வசதிகளை இலகுவாக்கவென இந்த மாதம் (மாசி) முதல் மருத்துவ ஹொட்லைன் சேவையொன்று முதன்முறையாக ஆரம்பிக்கப்படவுள்ளது என சுகாதார அமைச்சர் டேவிட் கப்லான் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இதுவரை அவசர மருத்துவ பிரிவிற்கோ அல்லது உள்நுழை மருத்துவ நிலையத்திலோ மருத்துவ வசதிகளைப் பெற நிரப்பந்திக்கப்பட்டிருந்தனர்.

இனிமேல், அரசாங்கத்தினால் 1-800 பிரத்தியேக தொலைபேசி இலக்கம் ஒன்று சேவைக்கு வழங்கப்படும். அந்த இலக்கத்தை அழைக்கும் போது. ஒரு அலுவலர் நோயாளியின் விபரங்களை குறிப்பெடுத்து ஒரு தாதியிடம் வழங்குவார். அத் தாதி அண்மையில் இருக்கக் கூடிய, புதிய நோயாளரை பார்க்க விரும்பும் ஒரு குடும்ப வைத்தியரை நோயாளிக்கு தொடர்புபடுத்திக் கொடுப்பார்.

இருப்பினும், Health Care Connect, முக்கியமான பிரச்சனையைத் தீர்க்க முயலவில்லை. அதாவது மருத்துவர்களின் பற்றாக்குறையை தீர்ப்பதிலும் அக்கறை செலுத்துதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

**JRB Universal Inc.**
Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்-கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

Motor Vehicle Accident

Criminal

வாகன விபத்து!

கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..

உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்


416-803-5296

WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்

மற்றும் நிலக் கம்பளம்

பொருத்தும் வேலைகளில்

தன்னிகரற்றவர்!

சபேசன்

ஒருமுறை

தொடர்பு கொண்டால்

பலன் புரியும்!

416 605 1990


## அதிபர் பிரயாணம்...

சின்னக் குட்டியின் பூர்வாசிரமத்தை எடுத்துக் கூறினார். குமாரர் காலத்தில் சோமாஸ்கந்தக் கல்லூரியில் விடுதிச்சாலையும் இருந்தது. வெளி மாநிலத்து மாணவர்களும் இங்கு வந்து விடுதிச் சாலையில் தங்கிக் கல்வி கற்றனர். சின்னக்குட்டி விடுதிச் சாலையின் பிரதம சமையற்காரராகவும் இயங்கி வந்தார். பாடசாலைகளை அரசு பெறுப்பேற்ற பின்னர் விடுதிச் சாலை இல்லாது போய்விட சின்னக்குட்டி அலுவலக உதவியாளராகச் செயலாற்றினார். ஆனால் அவர் ஓய்வு பெறும் போது அவர் இச் சேவையிலே பத்து வருடங்களை நிறைவு செய்யாமையால் ஓய்வூதியம் கிடைக்கவில்லை. சின்னக்குட்டி பழைய விடுதிச் சாலையிலே உள்ள ஒரு விறாந்தையில் சமையல் செய்து ஆசிரியர்கள்

சிலருக்கு மதிய போசனம் கொடுத்து வந்தார். 'சரியப்பா, நானும் உனது மதிய போசனத்தர்களில் ஒருவனாகிறேன்' என்றேன். நான் இது நாள் வரை தேனீர் குடிப்பதில்லை. குடித்தால் கோப்பி, கோக்-பெப்சியும் குடிப்பதில்லை. ஆகவே எனக்கு இடைவேளை-யின் போது சின்னக்குட்டி எலுமிச்சம்பழம் கரைத்துத் தருவார். நாட்கள் ஓடின. ஆனால் திரு. சம்பந்தபிள்ளையால் அதுவும் முடிவுக்கு வந்தது.

அன்று கொஞ்சம் மழை பெய்தது. பாடசாலை வளாகத்தில் முற்புறம் சற்றுப் பள்ளம். அங்கே சற்றுத் தண்ணீர் தேங்கி நின்றது. மதிய இடைவேளை உணவு உண்ட பின்னர் சில ஆசிரியர்களுடன் பாடசாலையில் என் அலுவலத்தின் முன்னே நின்று உரையாடிக் கொண்டிருந்தேன். இரண்டு மாணவர்கள் தேங்கிய தண்ணீரை காலால் ஆளுக்கு ஆள் அடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். மெள்ள அவர்களைக் கூப்பிட்டு கன்னத்தில் இருவருக்கும் ஓங்கி அறைந்ததுடன் இருவரையும் சேட்டினைக் களைந்து துவைத்துச் சற்று உலரவைத்த பின்னரே வகுப்பினுக்குச் செல்ல விட்டேன். இந்த நிகழ்ச்சி ஓரளவுக்கு என்னைப் பற்றி ஏனைய மாணவருக்கும் தெரிய வைத்தது என எண்ணுகிறேன்.

**நேரசூசி மாற்றம்:** பல ஆசிரியர்கள் மானிப்பாய், யாழ்ப்பாணம், நெல்லியடி போன்ற இடங்களிலிருந்து பாடசாலைக்கு வருபவர்களாயிருப்பதால் அவர்கள் தங்களது வீடுகளுக்கு கால நேரத்தில் சென்று சேர்வதற்காக நேரசூசியில் மாற்றம் செய்து பாடசாலையை 3:15க்கு முடித்தனர். இதற்காகக் காலை மாலை இடைவேளைகளை இல்லாமல் செய்தமையால் 30 நிமிடங்கள் மிச்சம் பிடிக்க முடிந்தது. மதிய போசன இடைவேளையாகிய 1:00 மணித்தியாலத்தினை 45 நிமிடமாகக் குறைத்தமையால் இன்னும் 15 நிமிடம் சேமிக்க முடிந்தது. இது ஆசிரியர்களுக்கு அனுகூலத்தை வழங்கியது உண்மை என்றாலும் மாணவர்களுக்குப் பெரிதும் கஷ்டமாக இருந்தது. எந்த நேரமும் சில மாணவர்களை வகுப்புகளுக்கு வெளியே காண முடிந்தது. (அடுத்த இதழில் தொடரும்)




"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

"Honesty, Integrity, Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் M.A
Sales Representative
Direct: 416-284-5555
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED



Graphic Land - 647. 219. 7576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

# Canadian Federal Budget - 2009

Here is a list of budget highlights on different topics.

**Business support**
Ottawa greases credit wheels
The federal government is bolstering efforts to keep credit flowing in Canada, including a $50 billion increase in the amount of mortgages it plans to purchase from the banks and other lenders.

**$12 billion for auto credit**
Government officials are hoping a $12 billion program aimed at freeing up automotive credit will lure customers back to dealer lots after sales went cold last month.

**Businesses cheer credit boost**
Business groups applauded measures in the proposed federal budget to increase access to credit and cut taxes.

**Environment**
Stimulus plan falls a few shades short of 'green,' critics say
The federal budget contained more than $3 billion in spending to address the environment, but it fell short of markers set by those who had called on the Conservatives to deliver a "green" economic stimulus plan.

**Infrastructure**
Union Station facelift on tap in national fixup
Toronto's historic Union Station will get a long-awaited multi-million dollar facelift as part of the federal government's two-year, $12 billion infrastructure spending pledge.

$1.4B for water systems in aboriginal communities
The federal government will spend $1.4 billion to tackle aboriginal priorities with projects to upgrade water systems and health services.

Billions in funding for cities bound up in red tape
An economic recession may just be good for us city folk – if only we had the money to take advantage of the bargains.

**Social services**
Politics spurs social investment by Tories
Facing intense political pressure to boost social spending, Finance Minister Jim Flaherty appeared to try to satisfy his opponents who had warned the federal budget must provide help for those left most vulnerable by the economic crisis.

**Benefits boost provides little comfort to jobless**
Ottawa's plan to extend employment insurance by five weeks is better than nothing, say Toronto-area workers struggling with job loss and an uncertain future.

**Taxes**
Tax cuts mean $5.9B loss in revenue
The budget calls for tax measures that will leave more money in more people's pockets, including the sprawling middle class, whose support the Conservatives covet.

Tax changes not as good as they seem
Ottawa's latest budget gives Canadians some tax measures to cheer about but they may not be as generous as they appear at first blush.

New tax credit for home improvements has a short lifespan
The proposed federal budget offers a temporary new tax credit for your home renovations – provided you do them soon.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

***Dental Office***

BRACE FOR A GREAT SMILE

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

DR. ILLANGO & ASSOCIATES

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S,M.S,F.D.SR.C.S (Eng), General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S,M.D,F.R.C.D (C), Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO


B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஜயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**

**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org